# உதயன்

சுடர் : 36 கதிர் : 030 | சனிக்கிழமை | மார்கழி 11ஆம் நாள் 26 டிசெம்பர் 2020 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 விலை : ரூ.30

செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## அனைவருக்கும் வகுப்பேற்றம்!

கொழும்பு, டிசெ.26
2021 ஆம் ஆண்டு ஜனவரி 11ஆம் திகதி முதல் கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படவுள்ளன. அனைத்து மாணவர்களும் தரம் உயர்த்தப்படு 19



## பட்டப்பகலில் நடுவீதியில் கத்திக்குத்தில் ஒருவர் பலி

### மீசாலையில் கொடூரம்

சாவகச்சேரி, டிசெ. 26
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மீசாலை, புத்தூர் சந்திக்கு அண்மையில் நேற்றுப் பகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற கத்திக் குத்தில் ஒருவர் உயிரிழந்தார். இரு பிள்ளைகளின் தந்தையான ஐயாத்துரை மோகனதாஸ் (வயது 47) என்பவரே உயிரிழந்துள்ளார்.
கோயிலுக்குச் 19

## மருதனார்மடம் கொத்தணி 105

### இரண்டாவது சோதனையில் வியாபாரிக்கு தொற்று உறுதி

யாழ்ப்பாணம், டிசெம்பர் 26
உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த மருதனார்மடம் சந்தை வியாபாரி ஒருவருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
அவருக்கு மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது பி.சி.ஆர். பரிசோதனையிலேயே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். 19

## நேற்றும் 551 பேருக்கு கொரோனாத் தொற்று!

கொழும்பு, டிசெ.26
இலங்கையில் நேற்றும் 551 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் 19

## கோரிக்கையோடு வரும் மக்களை மக்கள் பிரதிநிதிகளிடம் திருப்புக!

### பிரதேச செயலர்களுக்கு யாழ். மாவட்டச் செயலர் அறிவுரை

யாழ்ப்பாணம், டிசெ. 26
தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான கோரிக்கைகளுடன் பிரதேச செயலகங்களுக்கு மக்கள் வந்தால் அவர்களை மக்கள் பிரதிநிதிகளிடம் அனுப்புங்கள். மக்கள் பிரதிநிதிகள் வழங்கும் திட்ட 19

## வவுனியா மருத்துவமனையில் விடுதியில் சிகிச்சை பெற்ற பெண்ணுக்கு கொரோனா

வவுனியா, டிசெ.26
வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த பெண் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
அவர் மருத்துவமனையின் சாதா 19

## கடைக்குள் புகுந்த கும்பல் ஆயுதமுனையில் கொள்ளை

### கைதடிச் சந்தியில் சம்பவம்

கொடிகாமம், டிசெ. 26
கைதடிச் சந்தியில் உள்ள பலசரக்கு கடையில் வாள், கோடரி போன்ற ஆயுதங்களுடன் வந்த மூவர், கடையிலிருந்தவர்களை அச்சுறுத்தி கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். 19

## கல்மடுக் குளத்தில் குடும்பஸ்தர் மாயம்

கிளிநொச்சி, டிசெ.26
புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மடுக் குளத்தில் குளிக்கச் சென்ற குடும்பத் தலைவர் ஒருவர் நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 19



## வடக்கு மக்களின் குரல்வளையை நசுக்கி ஒடுக்குவதற்கு முயலாதீர்!

கொழும்பு, டிசெ. 26
வடக்கு மக்களின் குரல் வளையாகத் தொடர்ந்து ஒலித்து வரும் 'உதயன்' பத்திரிகை மீது வழக்குத் தாக்கல் செய்து அடக்க முயற்சிக்க வேண்டாம் என்று அரசிடம் விநயமாக 19



## 50 பேருடன் சுனாமி நினைவேந்தல்!

### அனுமதி என்கிறார் வடக்கு சுகாதார பணிப்பாளர்

யாழ்ப்பாணம், டிசெ.26
சுனாமி நினைவேந்தலை ஆகக் கூடியது 50 பேருடன் சுகாதார 19

## ஜனாஸா எரிப்புக்கு வடக்கிலும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ.26
இலங்கையில் கொரோனாவால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்படுவதை கண்டித்து யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்களால் ஐந்து சந்திப் பகுதியில் நேற்றுக் கவன 19

## ஜனநாயகத்தை அடக்குவதில் குறியாகவுள்ளது ஆட்சிப்பீடம்

ஹக்கீம் கொதிப்பு 19

## பெரும் பின்விளைவுகளை இந்த அரசு சந்தித்தே தீரும்

ரிஷாத் எச்சரிக்கை 19

## தமிழ் ஊடகங்களை ஒடுக்குவதில் ராஜபக்ச குடும்ப அரசு கங்கணம்!

மனோ கடும் சீற்றம் 18

# பிரபாரனின் ஒளிப்படம் வெளியிட்டதை சட்டரீதியாக சவாலுக்குட்படுத்த முடியாது

## கலாநிதி விக்கிரமபாகு தெளிவுபடுத்தல்



**கொழும்பு, டிசெ. 26**
**பிரபாகரன் என்பவர் வரலாற்றுடன் தொடர்புபட்ட நபர். அவர் தொடர்பான படங்களை, தகவல்களை வெளியிடுவது எந்த விதத்திலும் தவறானதாக அமையாது. அதனை சட்ட ரீதியாக சவாலுக்குட்படுத்தவும் முடியாது. இவ்வாறு கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
பிரபாகரனுக்கென அரசியல் கொள்கையொன்று இருந்தது. அவரின் கொள்கையை நாம் ஏற்கின்றோமா அல்லது இல்லையா என்பது இங்கு முக்கியமில்லை. அவர் வரலாற்றுடன் தொடர்புபட்ட நபர். வரலாற்று ரீதியான தகவல்களை வழங்கும்போது அவர் தொடர்பில் என்றும் பேசப்படும்.
உதயனில் வெளியான ஆக்கம் வன்முறையைத் தூண்டும் விதத்தில் அமையவில்லை. மக்களுக்கு தகவல் வழங்குவது ஊடகங்களின் உரிமை. அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பது ஏற்றுக் கொள்ளமுடியாது. அது ஊடக சுதந்திரத்துக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல். அதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம், என்றார். (ஒ,44)



# உதயன் மீதான வழக்கு அரசியல் பழிவாங்கலே!

## சந்திரகுமார் சாடல்

கிளிநொச்சி, டிசெ. 26
உதயன் பத்திரிகைக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கு அரசியல் பழிவாங்கலே. இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
இலங்கை அரசால் பயங்கரவாத அமைப்பு என்று தெரிவிக்கப்படும் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் பிறந்த நாள் அன்று அவரின் படத்தையும் சொற்களையும் பிரசுரித்ததாகத் தெரிவித்து யாழ்ப்பாணம் பொலிஸாரால் யாழ்ப்பாணம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று பத்திரிகை மூலமாக அறிந்தேன்.
இது தொடர்பாக எனது கண்டனத்தை தெரிவிக்கின்றேன். குறிப்பாக தமிழ்த் சிங்கள ஆங்கில பத்திரிகைகளில் இவ்வாறு செய்திகள் வருவது வழமை. ஆனால் எதற்காக உதயனுக்கு மட்டும் வழக்குத் தாக்கல் செய்யவேண்டும்? இது அரசியல் பழிவாங்கல் என்பது புலப்படுகின்றது.
ஒசாம பின்லேடனும் ஒரு சர்வதேச பயங்கரவாதி. அவரின் புகைப்படங்களைத் தாங்கி எத்தனையோ பத்திரிகைகள் வெளிவந்துள்ளன அதற்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதா? எனவே இது ஊடக அடக்குமுறை என்பது புலனாகின்றது, என்றுள்ளது. (ஒ,6)

# ஜனநாயகமே கேள்விக்குறி

## உதயன் மீதான வழக்குத் தொடர்பில் பிரதேச சபை உறுப்பினர் லோகேஸ்வரன்

கொழும்பு, டிசெ. 26
இலங்கையின் முன்னணி தமிழ் ஊடகமான 'உதயன்' பத்திரிகை மீதான கோத்தாபாய அரசின் செயற்பாட்டை வன்மையாகக் கண்டிக்கிறேன். இவ்வாறு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினர் சி.லோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
'போர்க் காலத்தில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி களை மிகவும் நெஞ்சுரத்துடன் உலகுக்கு உதயன் பத்திரிகை எடுத்துக் கூறியது. இன்றும் அடக்குமுறைக்கு உள்ளாவதை வன்மையாகக் கண்டிப்பதோடு இந்த சம்பவம் இலங்கையின் ஜனநாயகத்தை கேள்விக்குள்ளாக்கியுள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ,246)



# கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை நசுக்குகின்றனர்

## வினோ எம்.பி. கண்டனம்

வவுனியா, டிசெ. 26
உதயன் பத்திரிகைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையானது கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலே. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
உதயன் பத்திரிகை தமிழ் மக்களின் உரிமைக் குரலாக தொடர்ந்து ஒலித்துக்கொண்டு வருகிறது. நீண்டகாலமாக பல்வேறு வடிவங்களில் உதயன் மீதான அடக்குமுறைகள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. தற்போது பிரபாகரனின் புகைப்படத்தை அச்சிட்ட குற்றச்சாட்டில் அதன் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடிய விடுதலைப் புலிகள் அமைப்பை தமிழ் மக்கள் தமது போராட்ட அமைப்பாக ஏற்றுக்கொண்டு, பிரபாகரனின் தலைமையையும் ஏற்றுக்கொண்டதற்காகவும், அது சார்ந்த செய்தியை பிரசுரித்தமைக்காகவும் தமிழ் ஊடகங்களின் ஊடக சுதந்திரம் நசுக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.
தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் போராட்டத்துக்கு தமிழ் ஊடகங்களின் பங்கு அளப்பரியது. அதிலும் உதயன் பத்திரிகை தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் இருந்து என்றுமே தடம் மாறியதில்லை. தமிழ் ஊடகங்களை அடக்குமுறைக்கு உள்ளாக்குவதன் மூலம், தமிழ் மக்களின் விருப்பங்களையும் அபிலாசைகளையும் குழி தோண்டிப் புதைத்துவிடலாம் என்று இந்த அரசு கங்கணம் கட்டியுள்ளது. அதன் வெளிப்பாடாகவே இந்த விடயத்தையும் பார்க்கமுடியும். இதன் மூலம் இலங்கையானது ஊடக சுதந்திரம் சார்ந்த விடயத்தில் மேலும் பின்னோக்கியே நகரும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை, என்றார். (ஒ,110)

## உதயன் மீதான வழக்கு

# தமிழ் பேசும் இனத்துக்கான பேரினவாதத்தின் எச்சரிக்கை

## மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் காட்டம்

மன்னார், டிசெ. 26
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் புகைப்படத்தை பிரசுரித்ததற்காக எமது உதயன் பத்திரிகை மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளமையை மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் என்ற வகையில் வன்மையாகக் கண்டிக்கின்றேன். இந்தச் செயற்பாடானது தமிழ் பேசும் சிறுபான்மை இனத்துக்கான சிங்கள பேரினவாதத்தின் எச்சரிக்கை என்று மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் எ.எம்.எச்.முஜாஹிர் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
வடமாகாணத்தில் வாழுகின்ற மக்களின் பிரச்சினைகளை -எமது அபிவிருத்திகளை உலகின் கவனத்துக்கு கொண்டுசென்று தமிழ் பேசும் சிறுபான்மை மக்களின் பத்திரிகையாக இருப்பவன் உதயன். சுதந்திரமாக யாருக்கும் பயப்படாமல் உள்ளதை உள்ளபடி எழுதுவதுதான் பத்திரிகை சுதந்திரம் அந்தப் பத்திரிகைகளின் சுதந்திரத்தை இன்று அடக்கி ஒடுக்க வேண்டும். அரசு செய்கின்ற பிரச்சனைகளை வெளியே வரவிடாமல் வடபுல சிறுபான்மை சமூகத்தின் பத்திரிகையாக வலம்வரும் உதயன் பத்திரிகையை அடக்கி ஒடுக்கும் நடவடிக்கையில் இந்த அரசு ஈடுபட்டு வருகிறது. இந்தச் செயற்பாட்டை மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் என்ற வகையில் கண்டிக்கின்றேன். மேலும் சகல விதத்திலும் எமக்கு உறுதுணையாக நிற்கும் பத்திரிகை. முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்ட ஜனாஸா எரிப்பு பிரச்சினை தொடர்பாக முஸ்லிம் மக்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்து வந்த பத்திரிகையை இல்லாமல் ஆக்க வேண்டும் என்று இந்த அரசு முயற்சித்து வருவதே உண்மை. இந்த செயற்பாட்டை உலக மக்களும் பார்த்து கேள்விகள் கேட்க வேண்டும். அனைத்து நாட்டிலும் அவர்களுக்கான பத்திரிகை சுதந்திரம் இருக்கிறது. ஆனால் இலங்கையில் அது இல்லை.
உதயன் பத்திரிகை என்றால் வடபுல மக்களுக்கு மாத்திரம் இல்லை இலங்கை முழுவதும் வாழுகின்ற சிறுபான்மை இனத்துக்காக குரல் கொடுக்கின்ற பத்திரிகை. அதை அழிக்க நினைக்கின்றார்கள். இங்கு ஒரே நாடு ஒரே சட்டம் என்று சொல்கின்றார்கள். ஆனால் ஒரு பத்திரிகையில் எமது செய்தியை பிரசுரிக்க முடியாத நிலையில் நாங்கள் இருக்கின்றோம், என்றார். (ஒ,213)

# உதயன் மீதான வழக்கு; வன்மையான கண்டனங்கள்

### வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கம் அறிக்கை

**வவுனியா, டிசெ. 26**

**இலங்கையில் ஊடக அடக்குமுறைகள் பல்வேறு வடிவங்களில் காலத்துக்கு காலம் அரங்கேறி வருகின்றன. ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்று ஊடகத்துறையை எடுத்தியம்பிய போதிலும் இலங்கை போன்ற நாடுகளில் அதன் தன்மையை பேணுவதற்கு சந்தர்ப்பம் உள்ளதா என்பது கேள்வியாகவே உள்ளது.**

இவ்வாறு வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

சுதந்திரமான ஊடக செயன்முறையைப் பயன்படுத்த எந்தெந்த நாடுகள் அனுமதிக்கின்றனவோ அந்தந்த நாடுகளே சிறந்த ஜனநாயகப்பண்புகளுடனான ஆட்சிக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றன.

எனினும் இலங்கையில் தொடர்ந்தும் ஊடகங்கள் மீது மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகளை வவுனியா தமிழ் ஊடகவியலாளர்களாக நாம் பல தடவைகள் கண்டித்து வந்துள்ளோம்.

அவை கருத்தில் எடுக்கப்படாத நிலையிலேயே வடக்கில் இருந்து வெளிவரும் முன்னணி பத்திரிகையான உதயன் மீது தற்போது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஊடகங்களை அடக்கி மக்களின் கருத்தறியும் சுதந்திரத்தை பறிக்க நினைக்கும் ஏகாதிபத்திய தன்மையை ஊடக சங்கம் என்ற ரீதியில் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம், என்றுள்ளது. (ஒ,110)

## ரூபாவின் வீழ்ச்சியைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்

### இலங்கை மத்திய வங்கி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.26

இலங்கை நாணயப் பெறுமதி வீழ்ச்சியடையாமல் தடுக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

செலாவணி வீதத் தளம்பலின் அண்மைக்கால அதிகரிப்பு அடிப்படையற்றதும் ஏற்றுக்கொள்ளமுடியாததும் என மத்திய வங்கி கருதுகின்றது. அதற்கமைய, ஏனைய வழிமுறைகளுக்கு மத்தியில் மத்திய வங்கியானது உள்நாட்டு வெளிநாட்டு செலாவணி சந்தையில் தளம்பல்களைக் கட்டுப்படுத்த பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும். இதன்படி, அத்தியாவசியமற்ற பொருள்களின் இறக்குமதி தொடர்ந்தும் கட்டுப்படுத்துவதனூடாக நவம்பரில் அவதானிக்கப்பட்டதைப் போன்று அமெரிக்க டொலர் ஒன்றுக்கான இலங்கை ரூபாவின் பெறுமதியை 185 ரூபாவை நோக்கி அடுத்துவரும் சில நாள்களினுள் கொண்டுவர முடியும். மேலும், அலுவல்சார் ஒதுக்குகள் போதுமான மட்டத்தில் காணப்படுகின்றன என்பதை மத்திய வங்கி மீண்டும் வலியுறுத்துகின்றது. தற்போது, மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் அமெரிக்க டொலர் 5.6 பில்லியனாகக் காணப்படுகின்றது. ஒதுக்குகளின் மட்டத்தை அதிகரிக்க மத்திய வங்கியின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இணைத்தரப்பினர்களுடனான கலந்துரையாடல்களும் இறுதி மட்டத்தை எட்டியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

உதயன் மீதான வழக்கு

## ஊடக சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்

### சட்டத்தரணி பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 26



உதயன் பத்திரிகைக்கு எதிரான நடவடிக்கையானது தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரலை நசுக்கும் செயலாகும். அதேபோல கருத்து மற்றும் ஊடக சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலாகும். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இவ்வாறு ஐக்கிய சோசலிஷக் கட்சியின் தேசிய அமைப்பாளரும், செந்தாரகை சஞ்சிகையின் ஆசிரியருமான சட்டத்தரணி சிறிநாத் பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாத நடவடிக்கையை தூண்டும் விதத்தில் செயற்படும் நபர்களுக்கு எதிராகவே பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கலாம்.

ஆனால் இலங்கையில் குறித்த சட்டமானது தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான சட்டமாக மாறியுள்ளமை வேதனைக்குரிய விடயமாகும். தற்போது தமிழ் பேசும் மக்களுக்காக செயற்படும் ஊடகங்களும் குறிவைக்கப்பட்டுள்ளன.

ஒரு நபரை புகழ்ந்தோ அல்லது விமர்சித்தோ ஆக்கங்களை பிரசுரிக்கக்கூடிய உரிமை அச்சு ஊடகங்களுக்கு இருக்கின்றன. அந்த உரிமையை சவாலுக்குட்படுத்த முடியாது.

பயங்கரவாதத்தைத் தூண்டும் விதத்தில் உதயனின் செய்தி ஆக்கம் அமையவில்லை.

பிரபாகரனை ஆட்சியாளர்கள் பயங்கரவாதி என்று குறிப்பிட்டாலும், தமிழ் மக்கள் அவரை வீரனாகவே பார்க்கின்றனர்.

மக்கள் விரும்புவதை ஊடகங்கள் வெளியிடவேண்டும். ஊடகங்கள் மக்களின் குரலாக இயங்கவேண்டும். மாறாக ஆட்சியாளர்களுக்குத் தேவையானவற்றை எழுதி பிரசுரிப்பதற்கு பெயர் ஊடகம் அல்ல.

அதிகாரப் பகிர்வு, சுயநிர்ணயம் ஆகியவற்றை கதைத்தால்கூட எதிர்காலத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வழக்கு தொடுக்கப்படும் சூழ்நிலை உருவாகலாம். உதயனுக்கு எதிரான நடவடிக்கை நிறுத்தப்படவேண்டும். அதற்காக நாம் குரல் கொடுப்போம், என்றார். (ஒ.44)

## ஆழிப்பேரலை நினைவேந்தல்!!

வவுனியா,டிசெ.26

ஆழிப்பேரலையின் 16 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வவுனியா பூந்தோட்டத்தில் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

லயன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி நினைவுத் தூபியில் காலை 9 மணிக்கு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இதற்கு முன்னராக காலை 8.30 மணியளவில் உயிரிழந்த உறவுகளை நினைவுகோரி நரசிங்கர் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெறவுள்ளன. (ஐ-110)

## வாரிவனேஸ்வரருக்கு நன்னீராட்டு விழா

சாவகச்சேரி,டிசெ.26

சோழர் காலத்தில் அமைக்கப்பட்டு, ஒல்லாந்தர் காலத்தில் அழிக்கப்பட்ட சாவகச்சேரி ஆதி வாரிவனேஸ்வரர் ஆலயத்தில் மங்கல நன்னீராட்டு விழா நேற்று நடைபெற்றது.

ஆலய சைவ மகாசபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.சைதன்ய வேலன் சுவாமிகள், பேராசிரியர் புஷ்பரத்தினம், மறவன்புலவு சச்சிதானந்தம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ-9)







ஆழிப்பேரலையின் 16 ஆம் ஆண்டு நினைவு தினம் நாடளாவிய ரீதியில் இன்று கடைப்பிடிக்கப்படவுள்ளது.

இந்நிலையில் உடுத்துறையில் உள்ள இரண்டு நினைவாலயங்களிலும் நினைவுதின நிகழ்வுகள் ஏற்பாடாகியுள்ளன. (ஐ-70)

## திறந்த போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,டிசெ.26

வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ( குடிசார் ) தரம் 111 பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது . பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன . எனவே அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் "செயலாளர் , மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு , வடக்கு மாகாணம் , இல : 393/48 , கோவில் வீதி , நல்லூர் , யாழ்ப்பாணம் " என்னும் முகவரியுடனோ அல்லது 021 2219939 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மாவட்ட எல்லைகளை கடப்பதைத் தடை செய்க

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் மீண்டும் வலியுறுத்து

**கொழும்பு,டிசெ.26**
**மேல் மாகாணத்தில் அதிக எண்ணிக்கையான கொவிட்19 தொற்றாளர்கள் பதிவாகி உள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டு மக்கள் மாவட்ட எல்லைகளைக் கடப்பதைத் தடுக்க பயணக் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும் என்று இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**


கொழும்பு மாநகர சபைப் பகுதிக்குள் மிகப்பெரும் எண்ணிக்கையான கொவிட்19 நோயாளிகள் பதிவாகியுள்ளனர் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத் தலைவர் உபுல் ரோகண தெரிவித்தார்.
நோயாளர்கள் சமூகத்தில் அடையாளம் காண முடியாத வகையில் புழக்கத்தில் உள்ளனர்.
கம்பஹா, களுத்துறையிலும் இது போன்ற சூழ்நிலைகளே அறிக்கையிடப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார். இதேவேளை, பொதுச் சுகாதார சங்கச் செயலாளர் எம். பாலசூரிய, கட்டுப்பாடுகளை விதிக்க முன் மூன்று வகை குழுக்கள் தொடர்பில் கருத்தில் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.
முதல் குழு மேல் மாகாணத்தில் பணி புரியும் பிற மாகாணங்களைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தற்போது வீடு திரும்பும் வழியில் உள்ளனர். இரண்டாவது குழுவினர் கிராமப்புறங்களிலிருந்து பொருள்கள், சேவைகளைப் பெறுவதற்காக மேல் மாகாணத்துக்கு வருகை தருகின்றனர். மூன்றாவது குழுவினர் மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தலில் இருப்போர். அவர்கள் இலங்கையின் பிற பகுதிகளுக்கு உல்லாசப்பயணம் மேற்கொள்கின்றனர்.
இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## அன்டிஜென் சோதனையில் மாணவனுக்கு தொற்று

கொழும்பு, டிசெ.26
மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் 11 இடங்களில் அன்டிஜென் பரிசோதனை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
இந்நிலையில் பெந்தோட்டை பாலத்துக்கருகில் முன்னெடுக்கப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில், பாடசாலை மாணவன் ஒருவன் கொரோனா வைரஸ் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.
மாணவனின் தந்தை களுத்துறை தெற்கு பொலிஸ் நிலையத்தில் பணியாற்றி வருவதால், இங்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் மாணவனின் தந்தை உள்ளிட்ட மேலும் நால்வர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ந-இ)

## சம்பிக்க, பொன்சேகா, ராஜித, வெல்கமவுக்கு ஐ.ம.சக்தியில் சிரேஷ்ட உப தலைவர் பதவி!

கொழும்பு, டிசெ. 26
6 சிரேஷ்ட உப தலைவர்களையும், 5 உப தலைவர்களையும் நியமிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது. கட்சியின் புதிய யாப்பின் பிரகாரமே இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.
சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரத்ன, சரத் பொன்சேகா, குமார வெல்கம, தலதா அத்துகோரல மற்றும் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோர் சிரேஷ்ட உப தலைவர்களாக நியமிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. ரவி சமரவீர, அஜித் பீ பெரேரா, சுஜீவ சேனசிங்க, சந்ராணி பண்டார, ரஞ்சன் அளுவிகார ஆகியோருக்கு 'உப தலைவர்' பதவி வழங்கப்படவுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளராக கபீர் ஹாசீமும், உப செயலாளராக அசோக அபேசிங்கவும் செயற்படவுள்ளனர்.
ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய யாப்புக்கு அக்கட்சியின் நிறைவேற்றுக்குழு பண்டாரவளையில் நடைபெற்ற கூட்டத்தின்போது ஒப்புதல் வழங்கியது. (ஒ.44)



## நான்காவது உயிரிழப்பு கிழக்கில் பதிவாகியது

கல்முனை, டிசெ. 26
கிழக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நான்காக உயர்வடைந்துள்ளது.
இந்தத் தகவலை கல்முனை பிராந்திய சுகாதார பணிமனை பணிப்பாளர் ஜீ.சுகுணன் தெரிவித்துள்ளார்.
நேற்று முன்தினம் வியாழக்கிழமை 54 வயதுடைய அட்டாளைச் சேனை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் நெஞ்சுவலி காரணமாக அக்கரைப்பற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
அங்கு மேற்கொள்ளப்பட்ட ஈ.சி.ஜி. பரிசோதனையைத் தொடர்ந்து அவருக்கு மாரடைப்பு வந்திருப்பதாக அடையாளப்படுத்தப்பட்டு, அன்டிஜென் பரிசோதனை மேற்கொண்டபோது அவருக்கு தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.
மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவ மனைக்கு அவர் மாற்றப்பட்டார். அங்கு அவர் உயிரிழந்தார், என்று சுகுணன் குறிப்பிட்டார். (ஒ.இ)

போலிக் கடவுச்சீட்டுடன்

## கனடாவுக்கு பயணமாகவிருந்த யாழ்ப்பாணப் பெண் கைது!!!

கொழும்பு, டிசெ. 26
போலிக் கடவுச்சீட்டை பயன்படுத்தி கனடாவுக்குச் செல்ல முயன்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 22 வயது பெண் ஒருவர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து இன்று காலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.
நேற்றுக் காலை டுபாய் நோக்கிப் புறப்பட்ட விமானத்தில் பயணிப்பதற்காக அவர் விமான நிலையத்துக்கு வருகை தந்துள்ளார்.
நுழைவுச் சீட்டு கருமபீடத்துக்கு அவர் வந்தபோது அவரது கடவுச் சீட்டை சந்தேகித்த அதிகாரிகள் மேலதிக விசாரணைக்காக ஆவணங்களை விமான நிலையத்தில் உள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.
கனேடிய கடவுச்சீட்டு உள்ளிட்ட பிற ஆவணங்களை தொழில்நுட்ப பரிசோதனைக்கு அதிகாரிகள் உட்படுத்தியதுடன், இது குறித்து இளம்பெண்ணிடம் கேள்விகளையும் எழுப்பியுள்ளனர்.
தொழில்நுட்ப ஆய்வுகளின் போது, இளம்பெண் வழங்கிய கனேடிய கடவுச்சீட்டு வேறு ஒருவருக்கு சொந்தமானது என்பதும், கடவுச்சீட்டில் காணப்படும் இளம் பெண்ணின் ஒளிப்படம் போலியானது என்பதும் தெரிய வந்தது.
அதன் பின்னரே இளம்பெண் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு, மேலதிக விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஒ.இ)

## வைன் தயாரிப்பகம் சுற்றிவளைப்பு

கொழும்பு, டிசெ.26
அனுமதிப் பத்திரமின்றி வைன் தயாரிப்பில் ஈடுபட்டுவந்த நிலையமொன்றை மதுவரித் திணைக்களத்தினர் சுற்றிவளைத்துள்ளனர்.
இதன்போது விற்பனைக்குத் தயாராக இருந்த இரண்டு லட்சம் பெறுமதியான வைன் கைப்பற்றப்பட்டுள்ளது.
இங்கு சட்டவிரோதமாகத் தயாரிக்கப்படும் வைன், சமூக வலைத்தளங்களூடாக விற்பனை செய்யப்பட்டு வருவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறித்த நிலையத்தில் கைதுசெய்யப்பட்ட நபர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (ந-இ)

## 300 ஆண்டுகள் சிறை விதிக்கப்பட்ட ரகுபதி சர்மாவுக்கும் கொரோனா

கொழும்பு, டிசெ. 26
முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை இலக்குவைத்து 1999ஆம் ஆண்டு நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்டு 300 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதியான ரகுபதி சர்மா கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.
இவருடன் கொழும்பு மகசின் சிறையில் தொற்றுக்குள்ளான அரசியல் கைதிகளின் எண்ணிக்கை 14ஆக அதிகரித்துள்ளது.
அரசியல் கைதிகள் உட்பட பல்வேறு சிறைகளில் உள்ள 65 வரையான தமிழ் கைதிகளுக்கும் இதுவரை கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.
இதேவேளை, தொற்று உறுதியான அரசியல் கைதிகள் அனைவரும் சுந்தக்காடு கொரோனாத் தொற்று சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர் என்று முதலில் தகவல்கள் வெளியாகியிருந்தபோதும் தற்போதுவரை வெலிக்கடை சிறை வைத்தியசாலையிலேயே அவர்கள் சிகிச்சைபெற்று வருகின்றனர். (ஒ.22)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தீர்க்கமாக முடிவெடுக்கும் தருணமிது!

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையின் கூட்டத்தில் மீண்டுமொரு தடவை இலங்கை தொடர்பான விவகாரம் சூடுபிடிக்கும் பேசுபொருளாக இருக்கும் எனப் பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை மீதான போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல் பிரச்சினைகள் தொடர்பாக அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளால் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் விதத்தில் புதிய பிரேரணைகள் முன்வைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என சர்வதேச மட்டத்தில் பேசப்படத் தொடங்கியுள்ளது.

ஜெனிவாவில் இந்த விவகாரத்தை கையாள்வது எந்த வகையில் என்பது குறித்த தமிழர் தரப்பு தலைமைகள் ஒருங்கிணைந்து ஒரு தீர்மானத்துக்கு வரமுடியாமல் இன்னமும் அறிக்கைப் போர் நடத்திக் கொண்டிருக்கின்றன. இத்தகைய சூழலில் நடைபெறவுள்ள ஜெனீவா அமர்வில் ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பின் ஆணையாளரால் இலங்கை விவகாரம் தொடர்பாக சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கையின் பிரதியொன்று இலங்கை அரசின் பார்வைக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டு விட்டது என்று தெரியவந்துள்ளது.

அதற்கான பதிலை அரசிடமிருந்து ஐ.நா மனித உரிமைகள் ஆணையகம் விரைவில் எதிர்பார்த்துள்ளது என்றும், அது அடுத்தவாரமளவில் இலங்கையரசால் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் கூறப்படுகிறது. இது எந்த வகையிலும் நம்பிக்கையான செய்தி எதனையும் தமிழ்மக்களுக்குத் தெரிவிப்பதாக இல்லை.

மாநாட்டின் மனித உரிமைகள் ஆணையாளரால் முன்வைக்கப்பட வேண்டிய அறிக்கையை முன்னதாக அரசுக்கு அனுப்பி அவர்களிடம் பதில் கேட்பதென்பது பலவிதமான சந்தேகங்களை எழுப்பத் தவறவில்லை. ஐ.நா.வின் பதில் தீர்மானங்களை எதிர்கொண்டு சமாளிக்கத் தயார் நிலையில் இருக்குமாறு, அரச தரப்புக்கு ஆலோசனை வழங்கும் உத்தியாகவும் இதனைப் பார்க்க முடியும்.

ஏற்கனவே இலங்கை அரசு, எதிரான ஐ.நா மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களில் இருந்து, அதற்கு இணை அனுசரணை வழங்குவதில் இருந்து , முற்றாக விலகுவதாக முகத்தில் அடித்தாற்போல் பகிரங்கமாகவே அறிவித்திருந்தது. அதற்குப் பின்னரும் புதிய அறிக்கையை அரசின் பார்வைக்கும் பதிலுக்குமென ஐ.நா மனித உரிமைகள் ஆணையகம் அனுப்பியிருப்பதென்பது ஓர் அர்த்தமற்ற விடயம் தான்.

இந்தப் புதிய அறிக்கை தொடர்பான பதிலை அரசு வழங்கும் முன்னரே ஐ.நா.வின் மனித உரிமைகள் சபையின் புதிய எதிரான பிரேரணைகள் எதுவும் நிறைவேற்றப்பட்டாலும் இலங்கை அதற்கு கட்டுப்படாது இணை அனுசரணை வழங்காது என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன உறுதியாகத் தெரிவித்திருந்தார். அவரின் கூற்று ஐ.நா மனித உரிமைகள் ஆணையக நகர்வுகளை எவ்வாறு இலங்கை அரசு கையாளும் என்பதைத் தெளிவாகக் கோடிகாட்டி நிற்கின்றது.

இதேவேளை அமெரிக்காவோ, பிரிட்டனோ இலங்கை விவகாரத்தில் சர்வதேச ரீதியில் தமக்குத் தேவையான அரசியல் அனுகூலங்களை மனதில் வைத்தே காய்களை நகர்த்தும் என்பதிலும் இருவேறு கருத்து கிடையாது. ஆக, எல்லாவகையிலும் இம்முறையும் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையகம் நியாயமானதும், நீதியானதும், நம்பிக்கை தரக்கூடியதுமான ஒரு தீர்க்கமான நிலைப்பாட்டை எடுக்குமா என்பது சந்தேகமே.

இந்த நிலையில் தமிழ் மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் சர்வதேசப் பொறிமுறை ஒன்றின் மூலமே நிரந்தரமான தீர்வை எட்ட முடியும் என தொடர்ந்து கூறிக் கொண்டிருக்கும் தமிழர் தரப்புத் தலைமைகள், அது சாத்தியப்படாதவிடத்து மாற்று வழி என்ன என்பது குறித்தும் இறுக்கமாக ஒருமித்து சிந்தித்து தீர்க்கமாக முடிவு எடுக்க வேண்டிய தருணம் இதுவே தான்.

# அரசுக்கு எதிராகப் போராட ஐ.தே.க களத்தில் குதிக்கும்

### அதன் தலைவர் ரணில் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 26

**நாட்டு மக்கள் தொடர்பில் நாம் சிந்தித்திருந்த போதிலும் மக்கள் எம்மைக் கருத்தில் கொள்ளாது ஊடகங்களில் அரங்கேற்றப்பட்ட நாடகங்களுக்கும், நடிப்புகளுக்கும் ஏமாற்றமடைந்துள்ளனர். இருப்பினும் மக்களைக் கைவிட நாம் தயாரில்லை.**

மக்களுக்காக ஐக்கிய தேசியக் கட்சி ஜனவரியிலிருந்து கடும் அரச எதிர்ப்பு போராட்டங்களை முன்னெடுக்கும் என்று அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொள்ளுப்பிட்டி இல்லத்தில் நேற்றுமுன்தினம் கட்சி உறுப்பினர்களைச் சந்தித்து சமகால விடயங்கள் குறித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வைரஸ் தொற்று பரவுதல், இதனால் ஏற்படும் உயிரிழப்பு மற்றும் அதன் பின்னரான அடக்கம் என இங்கு பல பிரச்சினைகள் உள்ளன. எனவே அரசாங்கம் உடன் இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். அவ்வாறல்லாது கொரோனா சடலங்களை வைத்துக் கொண்டு அரசியல் விளையாடுவது முறையல்ல.

அவ்வாறு அரசியல் நோக்குடன் செயற்பட்டமையாலேயே இன்று முஸ்லிம் சடலங்கள் தொடர்பான விவகாரம் மற்றுமொரு .தொற்று நோயாகப் பரவியுள்ளது. வைரஸ் தொற்றில் மாத்திரமல்ல பொருளாதார ரீதி யிலும் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். மக்கள் எம்மை எவ்வாறு நடத்தினாலும் அந்த மக்களுக்காக முன்நிற்க வேண்டியது எமது கடமையாகும் - என்றார். (ப)

### வடக்கில் மிதிவெடி அகற்ற

# அரசுக்கு ஜப்பானால் ரூ.15 மில்லியன் நிதி

கொழும்பு, டிசெ.26

வடக்கில் மிதிவெடி அகற்றும் பணிகளுக்காக ஜப்பானிய அரசு 115 மில்லியன் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள் ளது.

இது தொடர்பான நிகழ்வு நேற்று ஜப்பானிய தூதுவரின் இல்லத்தில் இடம்பெற்றது. இதன்போது ஜப்பானியத் தூதுவர் சுகியாமா அகிராவும், மெக் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் எமிலி பாயியும் கையெழுத்திட்டனர்.

மன்னாரிலும், வவுனியாவிலும் சுமார் 8 ஆயிரம் குடும்பங்களுக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலான திட்டத்துக் காகவே இந்த நிதி கையளிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் மிதி வெடி அகற்றும் திட்டங்களுக்காக ஜப்பான் 2002ஆம் ஆண்டு முதல் 38.2 மில்லியன் அமெரிக்க டொலர்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ப)

### மாரடைப்பு ஏற்பட்டவரிடம்

# பணம் கொள்ளை

கொழும்பு, டிசெ. 26

மோட்டார் வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்தபோது திடீரென மாரடைப்பு ஏற்பட்ட நபரிடமிருந்து 81 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் படல்கும்புர - எல்ல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. பொறியிலாளர் ஒருவரே இந்த சம்பவத்துக்கு முகம் கொடுத்துள்ளார் என்று குற்ற விசாரணைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. புத்தல பிரதேசத்தில் இருந்து தனது வீட்டுக்கு வந்தபோது அவருக்கு இந்த திடீர் மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. மோட்டார் வாகனத்தை அருகில் நிறுத்தி விட்டு பொறியிலாளர் உதவி கோரியுள்ள நிலையில் லொறி ஒன்றில் சென்ற மூவர் அவரிடம் பேச முயற்சித்துள்ளனர். அவரால் பேச முடியாமல் போன சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சந்தேக நபர்கள் பாதிக்கப்பட்ட நபரின் பையில் இருந்து 81 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ப)

# உடல்கள் தகன விவகாரம்; இப்போது மட்டும் ஏன் பூதாகரம்?

### சிங்கள ராவய அமைப்பு கேள்வி

கொழும்பு, டிசெ. 26

கடந்த ஒன்பது மாதகாலமாக முஸ்லிம்களின் ஜனாஸாக்களைத் தகனம் செய்யமுடிந்தது என்றால், இப்போது மாத்திரம் ஏன் இது பிரச்சினையாக இருக்கின்றது? என்று சிங்கள ராவய அமைப்பின் பொதுச்செயலாளர் மாகல் கந்தே சுதந்த தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அரசு இப் பிரச்சினைக்கு முன்னரே தீர்வு கண்டிருக்க வேண்டும். தற்போது இது சமூகத்தின் மத்தியில் வெகுவாகப் பரவிவிட்டது. சடலங்களைத் தகனம் செய்வது குறித்த அரசின் தீர்மானத்தால் முஸ்லிம் இளைஞர்கள் இனவாதத்தை நோக்கித் தள்ளப்படலாம் என்று நீதியமைச்சர் அலி சப்ரி ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் கூறியிருக்கின்றார். அவ்வாறெனின் இந்த நாட்டிலுள்ள இஸ்லாமிய அடிப்படைவாத செயற்பாடுகள் பற்றி அவருக்கு சில விடயங்கள் தெரிந்திருக்கின்றன. நாட்டில் இல்லாத பிரச்சினைகளை அவர் தோற்றுவிக்கின்றார். தற்போதைய அரசாங்கத்தினதும் ஜனாதிபதியினதும் நற்பெயருக்கு அலி சப்ரி களங்கத்தை ஏற்படுத்துகின்றார் - என்றார். (ப)

# ஜனவரிக்குப் பின்னரே பொருள்கள் விலை குறையும்

## வர்த்தகத் துறை அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு, டிசெ.26**

**அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை 2021 ஆம் ஆண்டுக்குப் பின்னரே கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும் என வர்த்தகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;
கொவிட்-19 வைரஸ் தாக்கம் முழு உலகுக்கும் சுகாதார மற்றும் பொருளாதார மட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பல செல்வந்த நாடுகள் எம்மைக் காட்டிலும் பாதிக்கப்பட்டுள்ளன. சர்வதேச மட்டத்தில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதன் தாக்கத்தில் இருந்து இலங்கை மாத்திரம் விடுபட முடியாது. 2021 ஆம் ஆண்டுக்குப் பின்னரே அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் குறைக்க முடியும்.
தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த முடியாது - என்றார். (ப)

# முஸ்லிம்கள் விவகாரம்; எதிர்க்கட்சி அரசியலாம்

*இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ.26
கொவிட்- 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழக்கும் முஸ்லிம் சமூகத்தினது உடலைத் தகனம் செய்யும் விவகாரத்தை வைத்து எதிர்க் கட்சியினர் அரசியல் இலாபம் தேடிக் கொள்கிறார்கள். பலமான அரசாங்கம் தோற்றம் பெற்றால் மாத்திரமே சவால்களை வெற்றிகொள்ள முடியும் என இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
உயிரிழப்பவர்களின் உடலை அடக்கம் செய்யலாம் என்று சுகாதாரக் குழு அறிவுறுத்தினால் அதனை முழுமையாகச் செயற்படுத்த தயாராக உள்ளோம். எந்த மதத்தினரதும் உரிமைகளையும் முடக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்குகிடையாது. கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்தி தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமாயின் நாட்டு மக்கள் அனைவரும் அரசின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார். (ப)

# பொலிஸாரின் இடமாற்றம் ஒத்திவைப்பு

கொழும்பு, டிசெ.26
பொலிஸாரின் வருடாந்த இடமாற்றங்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன எனறு பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.
கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக 2021 ஜனவரி 15 ஆம் திகதி திட்டமிடப்பட்ட இந்த இடமாற்றங்கள் மார்ச் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன. (ப)

# 599 பேர் நாட்டுக்கு

கொழும்பு,டிசெ.26
கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக, வெளிநாடுகளில் சிக்கித் தவித்த 599 இலங்கையர்கள், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை நேற்று வந்தடைந்தனர்.
ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இருந்து 390 பேரும், மெல்போர்னில் இருந்து 120 பேரும், ஆஸ்திரேலியாவின் சிட்னியில் இருந்து 69 பேரும் நாட்டை வந்தடைந்துள்ளனர்.
இவ்வாறு வருகை தந்தவர்களின் பொருள்கள் விமான நிலையத்தில் வைத்து கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, தொற்று நீக்கம் செய்யப்பட்டுள்ளது.
அதனைத் தொடர்ந்து அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (க-இ)

*பிரிட்டனுக்கு அனுப்பப்படும்*

# தபால் பொதிகளுக்கான கட்டணம் மறுசீரமைப்பு

கொழும்பு, டிசெ.26
2021 ஜனவரி முதல் பிரிட்டன் அரசால் நடைமுறைப்படுத்தப்படும் வரிக் கொள்கை மறுசீரமைப்புக்கு அமைவாக பிரிட்டனுக்கு அனுப்பப்படும் தபால் பொதிகளுக்கான கட்டணம் மறுசீரமைக்கப்படவுள்ளது என்று தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரட்ன தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது;
பிரிட்டன் அரசின் தபால் நிர்வாகப் பிரிவால் அறிவிக்கப்பட்ட வகையில் வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் தபால் பாவனையாளர்களால் பிரிட்டனுக்கு அனுப்பப்படும் அனைத்து தபால் பொதிகளுக்கும் கட்டணம் மறுசீரமைக்கப்படவுள்ளது சம்பந்தப்பட்ட வரிக் கொள்ளைக்கு அமைவாக பிரிட்டனுக்கு தபால் பொதிகளை அனுப்பும் அனைத்து பாவனையாளர்களும் செயல்படுவதுடன் அவ்வாறு செயல்படாத பட்சத்தில் பிரிட்டன் அரசின் தபால் அல்லது பிரிட்டன் சுங்கத்தால் சம்பந்தப்பட்ட பொருள் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நட வடிக்கைக்கு பாவனையாளர்கள் தனிப்பட்ட ரீதியில் பொறுப்புக் கூறுவதுடன் இலங்கை தபால் திணைக்களம் இந்த வரி அல்லது ஏனைய வரி செலுத்துவது தொடர்பாக எந்த வகையிலும் பொறுப்பேற்காது என்றுள்ளது. (ப)



தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் நடிகருமான எம்.ஜி. ஆரின் நினைவு தின நிகழ்வு நேற்று முன்தினம் வல்வெட்டித் துறையிலும் நடைபெற்றது.
வல்வெட்டித்துறை ஆலடியில் உள்ள எம். ஜி.ஆர் சிலைக்கு, எம். ஜி.ஆர். நற்பணி மன்றத்தால் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. (ஐ)

# சமூக நலத்திட்டங்களில் விதையனைத்தும் விருட்சம்



யாழ்ப்பாணம்,டிசெ.26
விதையனைத்தும் விருட்சம் அமைப்பினரால் இடர் மற்றும் கொரோனாவால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவும் வகையில் பரவலாக சமூக நலத்திட்டங்கள் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன.
தன்னார்வுத் தொண்டர்களின் நிதியுதவியுடன் வடக்கின் பல இடங்களுக்கு உதவிகளை நேரடியாக வழங்கி வருகின்றனர்.
முல்லைத்தீவு பனிக்கன்குளம், அம்பலப்பெருமாள் குளம், கோட்டைகட்டியகுளம், தென்னியங்குளம் ஆகிய பிரதேசங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 30 குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள் உள்ளிட்ட உலர் உணவுப் பொருள்களை வழங்கினர்.
ஒரு குடும்பத்துக்கு சுமார் மூவாயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கினர். கிளிநொச்சி இந்துபுரத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 30 குடும்பங்களுக்கும் அதே பொதிகளை வழங்கினர்.
இதன் அடுத்த கட்டமாக கொரோனாவால் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.
அதனடிப்படையில் வித்தகபுரம் கிராம சேவையாளர் பிரிவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 50 குடும்பங்களுக்கு மதிய உணவை வழங்கினர். (க)

# தேசிய கொள்கைகளுக்கு அடித்தளம்: வெற்றி பெற்றுள்ளாராம் ஜனாதிபதி

## பௌத்த ஆலோசனை சபையில் தெரிவிப்பு

தடைகள் மற்றும் சவால்களுக்கு மத்தியில் கடந்த ஆண்டு பல தேசிய கொள்கைகளுக்கான உறுதியான அடித்தளத்தை அமைப்பதில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வெற்றிபெற்றுள்ளார் என்று பௌத்த ஆலோசனை சபையில் கலந்துகொண்ட தேரர்கள் தெரிவித்துள்ளனர். 7ஆவது முறையாக ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் கூடிய பௌத்த ஆலோசனை சபைக் கூட்டத்தின்போதே தேரர்கள் இதனைத் தெரிவித்தனர்.
நாட்டின் பெரும் எண்ணிக்கையான மக்களின் எதிர்பார்ப்பாகவிருந்தது ஒரு தேசிய சிந்தனையின் அடிப்படையில் முடிவுகளை எடுக்கும் ஒரு தலைமையாகும். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் தொழில்கள் மற்றும் சலுகைகள் போன்ற குறுகிய விடயங்களை மக்கள் எதிர்பார்க்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பிருந்தே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அத்தகையவர்களின் ஆதரவை எதிர்பார்க்கவில்லை என்று இதன்போது தேரர்கள் தெரிவித்தனர்.
கொவிட் தொற்றுநோய் உட்பட பல தடைகளுக்கு மத்தியில், தேசிய கல்வி கொள்கை, தேசிய மரபுரிமைகளைப் பாதுகாக்கும் திட்டம் மற்றும் புதிய அரசமைப்பு உள்ளிட்ட நாட்டின் போக்கை மாற்றும் ஒரு திட்டத்துக்கு அடித்தளம் அமைத்ததற்காகவும் தேரர்கள் ஜனாதிபதியைப் பாராட்டினர். (ப)


# இணையத்தின் மூலம் அழகிகள் விற்பனை

## 11 பேர் கைது

கொழும்பு, டிசெ. 26
இணையத்தின் ஊடாக அழகிகளை விற்ற கும்பலொன்று கைதுசெய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
9 பெண்கள் உட்பட 11 பேரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். கல்கிஸ்ஸ பகுதியில் இரு மாடி சொகுசு வீடொன்றில் குறித்த சட்டவிரோத செயற்பாடு இடம்பெறுகின்றது என்று குற்றத்தடுப்புப் பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ப)

# மாத்தறை மாவட்டத்தில் சில பகுதிகள் முடக்கம்

மாத்தறை,டிசெ.26
மாத்தறை மாவட்டத்தின் சில பகுதிகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.
மாத்தறை - திக்வெல்ல - யோனக்புர கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று இராணுவத்தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.
குறித்த பகுதிகளில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையை அடுத்து, இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்தறை மாவட்டத்தில் மாத்திரம் 7 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (க-இ)



மன்னார் நானாட்டான் சந்தியில் டைமன்ட் ஸ்ரார் விளையாட்டுக் கழக இளைஞர்களால் நத்தார் பாலன் குடில் மின் விளக்குகளால் அழகுற அமைக்கப்பட்டுள்ளது. (ஐ-213)



தெல்லிப்பழை பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் பாலன் பிறப்பை சித்தரிக்கும் வகையிலான ஒளிவிழா நிகழ்வு நேற்றுமுன்தினம் பிரதேச செயலக மண்டபத்தில், பிரதேச செயலர் ச.சிவ்ரீ தலைமையில் நடைபெற்றது. (ஐ -9)

# குருநகர் திருட்டு; மூன்று பேர் கைது

யாழ்ப்பாணம்,டிசெ.26
யாழ்.குருநகர் பகுதியில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பில், மூன்று சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
கடந்த 7 ஆம் திகதி குருநகர் பகுதியில் உள்ள வீட்டுக்குள் புகுந்த திருடர்கள், அங்கிருந்த இரண்டரைப் பவுண் நகைகளைத் திருடிச் சென்றனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.
முறைப்பாட்டின் பிரகாரம், குருநகர் தொடர்மாடி குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த மூன்று இளைஞர்களை சந்தேகத்தில் கைதுசெய்துள்ளனர்.
கைதுசெய்யப்பட்ட இளைஞர்களை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க-25)

# திட்டமிட்ட விமான சேவைகள் நிறுத்தம்?

கொழும்பு, டிசெ. 26
**இலங்கைக்கு இன்று வருவதற்கு திட்டமிட்டிருந்த சுற்றுலாக் குழுக்களுடனான அனைத்து விமான சேவைகளும் இடைநிறுத்தப்படும் என கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.**

முதன்முறையாக இலங்கைக்கு வருகை தர ரஷ்ய சுற்றுலாக் குழுவுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக இலங்கை சிவில் விமான போக்குவரத்து ஆணையம் தெரிவித்தது. அதன்படி 200 க்கும் மேற்பட்ட ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் அடங்கிய விமானங்கள் இன்று கட்டுநாயக்க மற்றும் மத்தள சர்வதேச விமான நிலையங்களுக்கு வருகை தரவுள்ளன என்று அண்மையில் அறிவிக்கப்பட்டது.
இந்த நிலையில், ஐரோப்பா முழுவதும் பரவி வரும் கொரோனா வைரஸின் புதிய திரிபு காரணமாகத் திட்டமிடப்பட்ட விமான சேவைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன என்று விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ப)

கழிவுகள் அடங்கிய கொள்கலன்கள்;

# பாசெல் மாநாட்டுக்கு முறையிட அரசு முடிவு

கொழும்பு, டிசெ. 26
உக்ரைனிலிருந்து நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட விவசாயக் கழிவுகள் அடங்கிய கொள்கலன்கள் தொடர்பில் பாசெல் மாநாட்டு அலுவலகத்துக்கு முறைப்பாடு செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.
கொத்தமல்லி என்ற போர்வையில் தனியார் நிறுவனமொன்றால் விவசாயக் கழிவுகள் அடங்கிய கொள்கலன்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்று சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது. இவ்வாறான 28 கொள்கலன்கள் தொடர்பில் பாசெல் மாநாட்டு அலுவலகத்துக்கு முறைப்பாடு செய்யுமாறு சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர, அமைச்சின் செயலாளர் விசேட மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்கவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.
பாசெல் ஒப்பந்தத்துக்கு அமைய ஒரு நாட்டிலிருந்து மற்றுமொரு நாட்டுக்கு விவசாயக் கழிவுகளை ஏற்றுமதி செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், இந்த ஒப்பந்தத்தில் இலங்கையும் கைச்சாத்திட்டுள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட விவசாயக் கழிவுகளாக இலங்கையின் சூழல் கட்டமைப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்படக்கூடும் என சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது. இதனால் இறக்குமதி செய்யப்பட்டுள்ள அனைத்து கொள்கலன்களையும் உக்ரைனுக்கு மீள ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சுற்றாடல் அமைச்சு அறிவித்துள்ளது. (ப)



# “ஹரித்த அபிமானி” மரநடுகை திட்டம் நேற்று ஆரம்பம்

வவுனியா, டிசெ.26
நிலத்தடி நீரை பாதுகாக்கும் நோக்குடன் பத்து இலட்சம் மரக்கன்றுகளை நடும் “ஹரித்த அபிமானி” தேசிய வேலைத்திட்ட ஆரம்ப நிகழ்வு நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
அந்த வகையில் வவுனியா மாவட்டத்தில் நம்பவெட்டி கிராமத்தில் நிகழ்வு நடைபெற்றது.
நிகழ்வில் விருந்தினர்களாக கலந்துகொண்ட வவுனியா மாவட்டச் செயலர், நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் மற்றும் பிரதேச செயலாளர் ந.கமலதாசன் ஆகியோர் மரக்கன்றுகளை நடுகை செய்தனர். (ஐ110)

# விளையாட்டு வீரர்களுக்கு உபகரணங்கள் கையளிப்பு

முல்லைத்தீவு, டிசெ.26
முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசிய மட்ட போட்டிகளுக்கு தெரிவான விளையாட்டு வீரர்களுக்கு, விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாவட்டச் செயலர் க.விமலநாதன் தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.
நிகழ்வில் 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாண மட்ட போட்டிகளில் வெற்றி பெற்று, தேசிய மட்டத்துக்கு தெரிவான வீரர்கள் மற்றும் அவர்களை பயிற்றுவித்த ஆசிரியர்கள் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். (ஐ-110)



# புரேவி புயலால் பாதிக்கப்பட்ட 1,250 குடும்பங்களுக்கு உதவி

புங்குடுதீவில் புரேவி புயலால் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 250 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.
புங்குடுதீவு வாழ் கனடா பழைய மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பொதிகள் வழங்கப்பட்டன.
27 லட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள், ஆயிரத்து 250 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் பொதிகளை வழங்கினார். (க-25)



## பொதுக் கூட்டம்

சாவகச்சேரி,டிசெ.26
தென்மராட்சி அதிபர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் கடந்த புதன் கிழமை அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.
நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்-செ.பேரின்பநாதன், உபதலைவர்- எஸ்.கஜேந்திரன்,செயலாளர் - ஆ.தங்கவேல், உதவிச் செயலாளர் திருமதி தேவரதி சுதேஸ்கரன்-பொருளாளர் சு.சிவானந்தம் ஆகியோருடன் 10 பேர் கொண்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-131,9)

# தமிழ் அரசியல் கைதிகளை உடன் விடுவிக்கவேண்டும்

### வலி.மேற்கு பிரதேச சபையில் தீர்மானம்

**சங்கானை, டிசெ.26**
**தமிழ் அரசியல் கைதிகள் கொரோனாவின் பிடியில் சிக்கித் தவிக்கின்ற நிலையில், அவர்களை விடுவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலி.மேற்கு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

சகோதர சிங்கள மக்களும் முற்போக்கு சிங்கள அரசியல் தலைவர்களும் இந்த விடயத்தை மனிதநேய ரீதியில் அணுகி அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் எனவும் வலி.மேற்கு பிரதேச சபை கோரிக்கை விடுத்துள்ளது.
வலி.மேற்கு பிரதேச சபையின் 34 ஆவது அமர்வின்போதே இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
சபையில் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக உறுப்பினர் ந.பொன்ராசா விசேட பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்தார். அது சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானமாக எடுக்கப்பட்டது. இந்தத் தீர்மானம் உடனடியாகவே உரிய தரப்பினருக்கு அனுப்பிவைக்கப்படும் என தவிசாளர் தெரிவித்தார். (ப-20)

## வாகன விபத்தில் இளைஞன் காயம்

சாவகச்சேரி, டிசெ.26
வாகன விபத்தில் காயமடைந்த இளைஞர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஏ - 32 வீதியில் இடம்பெற்றது. பூநகரி நாச்சிக்குடாவைச் சேர்ந்த மகேந்திர்ராஜா ரகுவரன் (வயது-21) என்பவரே இவ்வாறு காயமடைந்தார். (ப-9)

## புற்றுநோய் விடுதியில் 6 நோயாளர்களுக்கு கொரோனா

காலி, டிசெ. 26
காலி கராபிட்டி போதனா மருத்துவமனையின் புற்றுநோய் விடுதியில் சிகிச்சைபெற்று வந்த மேலும் 6 நோயாளிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது என்று காலி மாவட்ட பிராந்திய தொற்று நோயியல் நிபுணர் மருத்துவர் வேணுரா சிங்கராச்சி தெரிவித்துள்ளார்.
பாதிக்கப்பட்டவர்களில் 4 ஆண் நோயாளிகளும் 2 பெண் நோயாளிகளும் உள்ளனர். அதன்படி, நான்கு ஆண் நோயாளிகள் ஹம்பாந்தோட்ட மருத்துவமனைக்கும், இரண்டு பெண் நோயாளிகள் கம்புருகமுவா மருத்துவமனைக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.
இதற்கிடையில், புற்றுநோய் விடுதிக்கு வந்த ஒரு நோயாளியின் மகள் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார். தற்போது கராபிட்டி போதனா மருத்துவமனையில் புற்றுநோயாளிகள் மற்றும் 3 பராமரிப்பாளர்கள் உட்பட 23 பேர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் -என்றார். (ப)



## கிறிஸ்தவ ஆடை மற்றும் கிரீடம் மன்னார் ஆயரிடம் கையளிப்பு

மன்னார், டிசெ.26
உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கிறிஸ்தவ ஆடை மற்றும், கிரீடம் ஆகியன நேற்றுமுன்தினம் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையிடம் கையளிக்கப்பட்டன.
மன்னார் ஆயர் இல்லத்துக்குச் சென்ற இலங்கை சுதந்திரக் கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளர் சாமிந்த பிருதிவிராஜ் வசலா உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட குறித்த ஆடை மற்றும் கிரீடத்தை ஆயரிடம் கையளித்தார்.
பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் அறிவுறுத்தல்கள் மற்றும் அறிவுரைகளின் பேரில், ஆடை மற்றும் கிரீடம் கையளிக்கப்பட்டன. (ப-56)

## மாணவனுக்கு சைக்கிள் கையளிப்பு

மட்டுவில், டிசெ.26
மட்டுவில் அ.த.க.பாடசாலையில் கல்வி கற்று 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 170 புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்த வறுமைக்குட்பட்ட மாணவன் ஒருவனுக்கு துவிச்சக்கர வண்டி வழங்கப்பட்டுள்ளது.
புலம்பெயர் தேசத்தில் (கனடா) வசிக்கும், மட்டுவில் தெற்கைச் சேர்ந்த பாரராசசிங்கம் மகிந்தனின் நிதியில் துவிச்சக்கர வண்டி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு நேற்று இடம்பெற்றது. பாடசாலையின் அதிபர் திருமதி தர்மினி, மட்டுவில் வடக்கு கிராம அலுவலர் சி.சுபாசன் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ப)





## போக்கட்டி அ.த.க.பாடசாலை மாணவர்கள் கௌரவிப்பு

கொடிகாமம்,டிசெ.26
போக்கட்டி அ.த.க பாடசாலையில் இந்த வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ.மயூரன், தென்மராட்சி கல்வி வலய கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.மதிதரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.
2020 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் சித்தி பெற்ற 14 மாணவர்கள் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர் அத்துடன் செவிப்புலன் குறைபாடுடைய இரண்டு மாணவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான செவிப்புலன் கருவிகள் வழங்கப்பட்டன. (ஐ-159)

## தோண்டி எடுக்கப்பட்டது குழந்தையின் சடலம்

கொழும்பு, டிசெ. 26
மினுவன்பிட்டி கல்லறையில் புதைக்கப்பட்டிருந்த உயிரிழந்த குழந்தையின் சடலம் நீதிமன்ற உத்தரவின் பேரில் தோண்டியெடுக்கப்பட்டது.
பாணந்துறை ஆதார மருத்துவமனையில் கெசல்வத்தையைச் சேர்ந்த பெண்ணொருவர் நவம்பர் 30 ஆம் திகதி குழந்தையொன்றை பிரசவித்திருந்தார். எனினும், குழந்தை உயிரிழந்திருந்தது. அந்த மருத்துவமனைக்குரிய கல்லறையில் குழந்தையின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. கஹதுடுவவைச் சேர்ந்த மற்றொரு பெண்ணும் அதே நாளில் உயிரிழந்த குழந்தையைப் பிரசவித்திருந்தார். கஹதுடுவவைச் சேர்ந்த பெண்ணுக்குப் பிறந்த குழந்தை, கெசல்வத்தையைச் சேர்ந்த பெண்ணுக்குப் பிறந்த குழந்தைக்குப் பதிலாக, தவறுதலாக அடக்கம் செய்யப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். தவறு அடையாளம் காணப்பட்ட பின்னர், இது தொடர்பாக பாணந்துறை தெற்கு பொலிஸில் முறைப்பாடு வழங்கப்பட்டது.
அதற்கமைய பாணந்துறை நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் குழந்தையின் உடல் தோண்டியெடுக்கப்பட்டது. பிரேத பரிசோதனைக்காக பாணந்துறை தெற்கு ஆதார மருத்துவமனையில் குழந்தையின் சடலம் ஒப்படைக்கப்பட்டது. (ப)

## போட்டிகளில் வெற்றிபெற்றோர் விவரம் வெளியீடு

யாழ்ப்பாணம்,டிசெ.26
வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சால் நடத்தப்பட்ட 2020ஆம் ஆண்டுக்கான குறும்படம் மற்றும் சுவரொட்டிப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களது விவரம் வெளியிடப்பட்டுள்ளது
இதன்படி குறும்படப் போட்டியில் முதலாம் இடம் கி.டிலக்சன் (அந்த ஒரு நொடியில்), இரண்டாம் இடம் சி.சிவராஜ் (த எண்ட் (The end),மூன்றாமிடம் றோ. றொஹான் (காலன் யார்) ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.
அத்துடன் சிறந்த படத்தொகுப்பு ஜே.நிவேதன் - (விதியின் ஓர் விதி) ,சிறந்த இசை - ஜெ. நிருசன் (பாழாகும் கனவுகள்), சிறந்த நடிப்பு வே. சோபன் ,சிறந்த ஒளிப்பதிவு சி . சிவராஜ் ஆகியோர் தெரிவாகினர். இவர்களுடன் ஆறுதல் பரிசுக்குரிய 6 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.
சுவரொட்டிப் போட்டியில் முதலாமிடம் எஸ்.டில்ஷாலினி, இரண்டாமிடம் டேவிட் டெனி, மூன்றாமிடம் சிவராஜன் சிவராகவன் ஆகியோர் பெற்றுள்ளனர்.
இவர்களுடன் மேலும் மூன்று பேர் ஆறுதல் பரிசில்களுக்கு தெரிவு செய்யப்பட்டனர் என்று அறிவிக்கபட்டுள்ளது. (ஐ)

# துப்பாக்கிச் சூடுகளாலேயே சிறைக் கைதிகள் இறந்தனர்

## விஜித ஹேரத் சுட்டிக்காட்டு



கொழும்பு, டிசெ. 26

மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டால் 11 சிறைக் கைதிகள் உயிரிழந்துள்ளனர். உண்மையை மூடி மறைக்க அரசு சொன்ன பொய்கள் விசாரணை அறிக்கையில் அம்பலமாகியுள்ளன என்று மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; மஹர சிறைச்சாலையில் 11 சிறைக் கைதிகள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். வத்தளை நீதிவான் நீதிமன்றத்தில் அது சம்பந்தமான வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது. நேற்றளவில் மேலும் நான்கு பேரின் இறப்புக்கான காரணம் துப்பாக்கியால் சுடப்பட்டமையே என வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு முன்னரும் 4 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று உறுதிசெய்யப்பட்டது. 11 பேரில் 8 பேர் சுடப்பட்டதாலேயே இறந்தனர் என்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. அமைச்சர்களின் பொய் அம்பலமாகியது.

நீதிமன்றத்தின் பிணையில் செல்ல விடுதலை செய்யப்படவிருந்த பெரும்பாலானோர் சிறைச்சாலையில் இருந்தார்கள். பிணை கிடைத்திருந்தவர்களை வெளியே விடுமாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சிறைக் கைதிகளின் முதலாவது கோரிக்கையாக அமைந்திருந்தது. இரண்டாவது பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு. மூன்றாவது வேறு முகாம்களில் இருந்து கொரோனாவால் பீடிக்கப்பட்டவர்களை கொண்டுவர வேண்டாம் என்பனவேயாகும். அப்படிக் கேட்டவர்கள்தான் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது - என்றார். (ப)

## கௌரவிப்பு நிகழ்வு



கிளிநொச்சி, டிசெ.26

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இல 02 அ.த.க பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் திருமதி.வ.விமலேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக கரைச்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.தர்மரட்ணம், கௌரவ விருந்தினர்களாக கரைச்சி பிரதேச செயலகத்தின் ஓய்வு நிலை உத்தியோகத்தர் க.மகேந்திரம், தேசிய கல்வியியல் கல்லூரியின் வளவாளர்களில் ஒருவரும், கிளி.கோணாவில் ம.வியின் ஆசிரியருமான சி.கதிர்மகன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-222)

★ ★ ★



சாவகச்சேரி,டிசெ.26

எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் செல்வி குணஜா குணரத்தினம் கலந்துகொண்டார். (ஐ -9)

## தப்பியோடிய தொற்றாளர்கள்; விரட்டிப் பிடித்த பொலிஸார்

கொழும்பு,டிசெ.26

மட்டக்களப்பு இளைஞர்களில் சிலருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து, அவர்களை சிகிச்சை நிலையத்துக்கு அழைத்துச் செல்ல சுகாதாரப் பிரிவினர் சென்றனர்.

எனினும் அவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்ற நிலையில், சிலாபம் கொழும்பு பிரதான வீதியில் வைத்து பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

நீர்கொழும்பில் நிர்மாணிக்கப்பட்டு வரும் ஹொட்டல் நிர்மாணப் பணிகளுக்காக மட்டக்களப்பில் இருந்து வந்த, இளைஞர்கள் நால்வருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

தொற்றுக்குள்ளான இளைஞர்களை சிகிச்சை நிலையத்துக்கு அனுப்புவதற்காக சுகாதாரப் பிரிவினர், அவர்கள் தங்கியிருந்த இடத்துக்குச் சென்றுள்ளனர்.

தொற்றாளர்கள் நான்கு பேரும் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

சுகாதாரப் பிரிவினர் பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கைக்கு அமைவாக, தொற்றாளர்கள் நால்வரும் கண்டுபிடிக்கப்பட்டனர். (க-இ)



சிறி சபாரத்தினம் அறக்கட்டளையினரால் முள்ளிவாய்க்கால் மேற்கு வளர்மதி கடற்றொழிலாளர் சங்கத்துக்கு உட்பட்ட 32 கடற்றொழில் குடும்பங்களுக்கு, ஆயிரத்து500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.(ஐ-19)

## பறவைகள் உயிரிழப்பு; விசாரணைகள் ஆரம்பம்

புத்தளம், டிசெ.26

புத்தளத்தின் வனாத்தவில்லு-எலுவன்குளம் ரால்மடுவ வயல்நிலப் பகுதியில் 150க்கும் அதிகமான பறவைகள் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

வன ஜீவராசிகள்திணைக்களத்தினர் குறித்த பகுதிக்குச் சென்று மேற்கொண்ட ஆய்வில் பறவைகள் உயிரிழந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

எனினும், இந்தச் சம்பவத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை. குறித்த பகுதியில் பயிர்களுக்கு தெளிக்கப்பட்ட பூச்சி கொல்லி காரணமாக இவ்வாறு பறவைகள் உயிரிழந்திருக்கலாம் என பிரதேச விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

நெல் குருவி உள்ளிட்ட பல்வேறு வகையான பறவைகள் உயிரிழந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ப)

## 5 மில்லியன் டொலர் எங்கே?

### விஜயதாச ராஜபக்ச கேள்வி



கொழும்பு, டிசெ.26

ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பகிந்தளிப்பதற்காக உலக முஸ்லிம் லீக் அமைப்பினால் வழங்கப்பட்ட 5 மில்லியன் டொலருக்கு என்ன நடந்தது என்பதை தேடிப்பார்க்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தரவுக்கு அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் உள்ளதாவது;

2019 ஜூலை மாதம் உலக முஸ்லிம் லீக் அமைப்பின் சமாதான சம்மேளனம் மாநாடு கொழும்பு தாமரைத் தடாக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டிருந்த உலக முஸ்லிம் லீக் அமைப்பின் செயலாளர் கலாநிதி ஷேக் மொஹமட் பின் அப்துல் கரீம் அல் ஈஸாவால் 5 மில்லியன் ரூபா கொடையாக வழங்கப்பட்டது என ஊடகங்களில் செய்தி வெளியிடப்படிருந்தது. குறித்த நன்கொடையானது, ஈஸ்டர் தாக்குதலில் மரணித்தவர் களின் உறவினர்கள் மற்றும் தாக்குதலில் காயமடைந்து அங்கவீனமுற்றிருப்பவர்களுக்கு வழங்குவதற்காக வழங்கப்பட்டது என்றே தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு நன்கொடையாக வழங்கப்பட்ட சுமார் 92 கோடி ரூபா ஈஸ்டர் தாக்குதலில் மரணித்தவர்களின் உறவினர்களுக்கு மற்றும் தாக்குதலில் காயமடைந்து பாதிக்கப்பட்டவர்களின் நல நோம்புகளுக்காக கிடைக்கப்பெறவில்லை. குறித்த நிதிக்கு என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்ளவேண்டி இருக்கின்றது. அதுதொடர்பில் உண்மை நிலையை வெளிப்படுத்தவேண்டும் - என்றார். (ப)

## சிறைக் கொத்தணி: தொற்றாளர் 3,596

கொழும்பு,டிசெ.26

சிறைச்சாலைகளில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 596 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரை சிறைக்கைதிகள் 2 ஆயிரத்து 664 பேர் குணமடைந்துள்ளனர். இவர்களில் 90 பேர் சிறைச்சாலை அதிகாரிகள். உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 5 ஆக பதிவாகியுள்ளது. சிறைச்சாலை கட்டமைப்புக்குள் மகசின் சிறைச்சாலை யில் 823 கைதிகள் தொற்றுக்குள்ளாகினர்.

வெலிக்கடை சிறைச்சாலையில் 810 பேரும், கொழும்பு ரிமாண்ட் சிறைச்சாலையில் 389 பேரும், மஹர சிறைச்சாலையில் 735 பேரும், நீர்கொழும்பு சிறைச்சாலையில் 58 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இக் கொத்தணியில் 3 ஆயிரத்து 280 பேர் ஆண்கள். 200 பேர் பெண்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

புத்தாண்டு

# உறுதியுரையில் ஒரே இனம் ஒரே தேசமாக மாற்றப்பட்டது

கொழும்பு, டிசெ. 26

ஆங்கிலப் புத்தாண்டு தினத்தில் நாடு முழுவதும் உள்ள அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களில் ஊழியர்களால் எடுக்கப்படும் உறுதியுரை சுற்றறிக்கையில் இம்முறை ஒரே இனமாக என்ற வசனம் ஒரே தேசத்தில் என்று மாற்றப்பட்டுள்ளது.

அரச ஊழியர்களாக பணிபுரிபவர்களிடம் வருடம் தோறும் முதல் வேலை நாளில் உறுதியுரை எடுத்து அதை ஏற்றுக்கொண்டோம் என அதில் அவர்களின் கையொப்பம் பெறுவது வழமையான நடைமுறையாக உள்ளது.

2021ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி அரச ஊழியர்களின் உறுதியுரை சுற்றறிக்கை பொதுச் சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலர் ஜே. ஜே.ரத்னசிறியால் வெளியிடப்பட்டுள்ளது. (ஒ.இ)



## 2 வென்டிலேட்டர் இஸ்ரேலால் இலங்கைக்கு கையளிப்பு!!

கொழும்பு, டிசெ.26

இலங்கைக்கு இஸ்ரேல் அரசால் இரண்டு வென்டிலேட்டர்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன. இதனை வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே, சுகாதார அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் மருத்துவர் எஸ்.எச். முனசிங்கவிடம் நேற்று முன்தினம் வெளிநாட்டு அமைச்சில் வைத்துக் கையளித்தார்.

புதுடில்லியிலுள்ள இஸ்ரேலியத் தூதரகத்தின் ஊடாக இந்த வென்டிலேட்டர்கள் கடந்த 10 ஆம் திகதி நன்கொடையாக வழங்கப்பட்டன.

இதையடுத்து, புதுடில்லியில் வதியும் இலங்கைக்கான இஸ்ரேலியத் தூதுவர் ரொன் மல்காவுடனான மெய்நிகர் சந்திப்பின் போது, இலங்கையின் நன்றிகளை வெளியுறவுச் செயலாளர் கொலம்பகே இஸ்ரேல் அரசுக்குத் தெரிவித்தார். (ந-இ)

## அரச பணியாளர்களுக்கு மேலதிக கொடுப்பனவு

### நிதி அமைச்சு அனுமதி

கொழும்பு, டிசெ. 26

அரச நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகளை வழங்க நிதி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

2019 ஆம் ஆண்டுக்கான நிறுவனங்களின் கணக்கறிக்கைகளின் அடிப்படையில் இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்று திறைசேரியின் செயலர் ஆட்டிகல்ல தெரிவித்துள்ளார்.

ஆகக் குறைந்தது 3 ஆயிரம் ரூபா தொடக்கம் 15 ஆயிரம் ரூபா வரையில் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலதிக கொடுப்பனவுகளுக்கு திறைசேரி அனுமதிவழங்கிய சுற்றறிக்கை அனைத்து அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களினதும் செயலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஒ.இ)



கிறிஸ்துமஸ் நாளில் மும்மத சிறார்களால் நேற்று 11 மணியளவில் பள்ளிமுனைக் கிராமத்தில் அமைந்துள்ள பெருக்க மரத்தடியில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தினரால் அமைக்கப்பட்ட பாலன் குடில் அருகில் சமாதானப் புறாக்கள் பறக்கவிடப்பட்டன. (ரி5213)






வவுனியாவில் நத்தார் தின விசேட வழிபாடுகள் நேற்று பூவரசன்குளம் புனித அன்னாள் தேவாலயத்தில் இடம்பெற்றன. நள்ளிரவு ஆராதனைகள் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் காலை 6.30 மணிக்கு அருட்தந்தை ரெஜினோல்டினால் விசேட திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. (ரி5-110)



மன்னார் மறை மாவட்ட ஆயர் கலாநிதி இமானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் மன்னார் புனித செபஸ்ரியார் தேவாலயத்தில் நேற்றுக் காலை நத்தார் வழிபாடுகள் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மக்கள் திருப்பலியில் கலந்து கொண்டனர். (ரி5-56)



திருகோணமலை மாவட்ட நத்தார் விசேட பூசை ஆராதனை மற்றும் திருப்பலி ஒப்புகொடுத்தல் திருகோணமலை மறை மாவட்ட ஆயர் கிறிஸ்டியன் நொயல் இமானுவேல் ஆண்டகையால் லிங்கன்நகர் அன்னை தெரேசா இல்லத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு நத்தார் தின வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (ரி5-40)

## 'வட்ஸ் அப்' குழுவுக்கு ஆபாச காணொலிகள்

### ஆசிரியை முறைப்பாடு

கொழும்பு, டிசெ.26

இணைய வழி கற்றல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வரும் 'வட்ஸ் அப்' குழுவுக்கு ஆபாசப் படங்கள் மற்றும் காணொலிகள் அனுப்பப்படுகின்றன என ஆசிரியை ஒருவர் பலாங்கொடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

பலாங்கொடை கல்வி வலயத்திலுள்ள பிரபல பாடசாலையொன்றின் ஆசிரியை, தனது வகுப்பிலுள்ள சுமார் 50 மாணவர்களை இணைத்துக்கொண்டு, 'வட்ஸ்அப்' குழுவொன்றை உருவாக்கி, இணையவழி மூலம் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்துள்ளார்.


குறித்த 'வட்ஸ் அப்' குழுவுக்கு ஆபாசப் படங்களும் வீடியோக்களும், வந்து குவிகின்றன என அந்த ஆசிரியை முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில், தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தொலைபேசி பகுப்பாய்வு அறிக்கையைப் பெற்று, குற்றவாளிகளைக் கண்டறிந்து, சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என பலாங்கொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-இ)





வவுனியாவில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மட்டுப்படுத்தப்பட்ட மக்களுடன் அமைதியான முறையில் நத்தார் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. அந்தவகையில், வவுனியா குடியிருப்பு தூய ஆவியானவர் ஆலயத்தில், ஆலய தந்தை அருட்பணி தயாளன் தலைமையில் நேற்று நள்ளிரவு 12 மணிக்கு விசேட திருப்பலி பூசைகள் இடம்பெற்று, திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, யேசு பிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன. குறித்த தேவாலயத்தின் பாதுகாப்பு கடமையில் இராணுவத்தினரும், பொலிஸாரும் ஈடுபட்டிருந்தனர். (ரி5-18)






# ஜனாஸா எரிப்புக்கு எதிராக கல்முனையில் ஆர்ப்பாட்டம்

அம்பாறை, டிசெ.26

முஸ்லிம்களின் ஜனாஸா எரிப்புக்கு எதிராக கல்முனை பிரதேசத்தில், மக்கள் வங்கிக்கு முன்பாக அமைதி ஆர்ப்பாட்டம் நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கல்முனைத்தொகுதி அமைப்பாளர் சட்டத்தரணி எம்.எஸ். அப்துர் ரஸ்ஸாக், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் எம்.ஜ.எம், அப்துல் மனாப் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் இளைஞர் அமைப்பாளர் அக்கில் ஹனீபா உட்பட பலர் கலந்து கொண்டனர். (ரி5)

## 8,600 கைதிகளுக்கு விரைவில் பிணை!

கொழும்பு, டிசெ.26

சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக 8 ஆயிரத்து 600 கைதிகள் பிணையில் விடுவிக்கப்படவுள்ளனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக சிறைக்கைதிகளுக்கு அசௌகரிய நிலை ஏற்பட்டுள்ளதால், அதைக் கட்டுப்படுத்துவதற்கு நீதி அமைச்சர், சட்ட மா அதிபருடன் கலந்துரையாடினார். இதன்போது கைதிகளைப் பிணையில் விடுவிப்பதற்கு தீர்மானித்தனர் என சிறைச்சாலைகள் ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

## முதியவர்களுக்கு அதிக பாதிப்பு

கொழும்பு, டிசெ.26

கொரோனாத் தொற்றினால் நாட்டில் வயோதிபர்கள் அதிகளவு பாதிக்கப்படுகின்றனர் என இராஜாங்க சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

அவர்களைப் பாதுகாப்பதற்கான விசேட சமூகப் பாதுகாப்பு செயற்திட்டமொன்றை உருவாக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

## கொரோனாத் தொற்று என எரிக்கப்பட்ட சிசுவின் மரணத்தில் சந்தேகம்

*உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுத் தாக்கல்*

கொழும்பு, டிசெ.26

கொரோனா வைரஸால் உயிரிழந்த 20 நாள்களேயான சிசுவின் மரணத்தில் சந்தேகம் உள்ளது எனத் தெரிவித்து உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உயிரிழந்த சிசுவின் பெற்றோர் இம் மனுவைத் தாக்கல்செய்துள்ளனர்.

திடீரென மரணித்த தமது சிசுவின் உடலைத் தகனம் செய்வதற்கான எவ்வித தேவையும் இருக்கவில்லை. கொவிட் காரணமாக உயிரிழந்த 19 பேரின் சடலங்கள் அவ்வேளையும் பிரேத அறைகளில் வைக்கப்பட்டிருந்தன.

20 நாள்களேயான தங்களது குழந்தையின் மரணம் சந்தேகத்துக்குரியது என வைத்திய அறிக்கையைப் பெற்று விசாரணைகளை ஆரம்பிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும் என அந்த மனுவில் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்த்தன, ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் ஜி.விஜயசூரிய, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, ஆரம்ப நிலை சுகாதார சேவை தொற்றுநோய் மற்றும் கொவிட் ஒழிப்பு விவகாரம் தொடர்பிலான இராஜாங்க அமைச்சர் விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ள, சுகாதார அமைச்சின் சஞ்ஜீவ முனசிங்க, அரச செயலாளர் டொக்டர் அமல் ஹர்ஸ டி சில்வா மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (ந-இ)

## மஹர சிறைக் கொலை: நீதி கிடைக்க வேண்டும்!

கொழும்பு, டிசெ.26

மஹர சிறைச்சாலைக்குள் இடம்பெற்ற வன்முறையில் உயிரிழந்த கைதிகளின் உறவினர்கள் நேற்று முன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தினர்.

இதில் கலந்து கொண்ட ஒருவர் மஹர சிறைச்சாலை வன்முறை இடம்பெற்று 24 நாள்களின் பின்னரே எனது கணவர் இறந்துவிட்டார் என்பதை நான் அறிந்துகொண்டேன் எனத் தெரிவித்தார். எனவே சிறைக் கலவரத்தில் உயிரிழந்தவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று இதன்போது உறவினர்கள் வலியுறுத்தினர்.

இதனிடையே, மஹர சிறைச்சாலை சம்பவத்தை நேரில் பார்த்த, நீதிமன்ற சாட்சியாளராகவுள்ள கைதியொருவர், சிறைக்குள்ளேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவரது சாட்சியங்களுக்கு அழுத்தம் விடுக்கப்படுகின்றது என்று கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது. (ற-இ)

## சூதாட்டத்தில் ஈடுபட்ட 13 பேர் கைதாகினர்

அனுராதபுரம், டிசெ.25

அனுராதபுரம் பகுதியில் தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறி சூதாட்டத்தில் ஈடுபட்ட 13 பேரை நேற்று முன்தினம் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கைதான நபர்கள் 24 முதல் 54 வயதுக்குட்பட்டவர்கள் என்பதுடன், அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வ-இ)



## இன்றைய நாள்

**மேடம்:** கவலை தீரும். முன்னேற்றமான சூழ்நிலையைக் காண்பீர்கள். உழைப்புக்கு ஏற்ற அங்கீகாரம் கிடைக்கும். சுக வாழ்வு கைகூடும். அலுவலகமோ அல்லது வீடோ புதிய முகவரிக்கு மாறும்.

**இடபம்:** உங்களின் செயல்பாடுகளில் திடீர் ஒழுங்குகள் கைகூடும். பல காலமாக இருந்து வந்த தடைகள் நீங்கி வழி பிறக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு நற்செய்தி உண்டு.

**மிதுனம்:** பஞ்சாயத்துக்கள் முடிவுக்கு வரும். பற்றாக்குறை அகலும். பணியாளர்கள் முன்னேற்றம் காண்பர். வருமானம் திருப்தி தரும். வங்கி தொடர்பான விஷயங்களில் வெற்றி பெறுவீர்கள்.

**கடகம்:** தேவை உள்ள உறவினர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். நீங்கள் விரும்பிக் காத்திருந்த பணி இடமாற்றம் கிடைக்கக்கூடும். பிள்ளைகள் வெற்றி அடைந்த செய்தி உங்களைத் தேடி வரும்.

**சிம்மம்:** பிள்ளைகள் மேற்கொள்ளும் பயணத்தால் நன்மை உண்டாகும். தகுந்த காரணத்தால் விருப்பத்தை ஒத்திப்போடுவீர்கள். புகழ் கூடும். நன்மைகள் நடைபெறும்.

**கன்னி:** உயர்பதவிகள் கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றும். பெற்றோரின் உடல்நலம் சீராகும். மனவலிமை அதிகரிக்கும். பழைய இனிய சம்பவங்களை அசைபோடும் சந்திப்பு நிகழும்.

**துலாம்:** யோசித்து செயல்படுவீர்கள். எதிரிகளின் பலம் குறையும். பெரிய முதலீடுகளை சிந்தித்து செய்யுங்கள். விருது கிடைக்கும். பிரச்னைகளில் அமைதியாக இருங்கள்.

**விருச்சிகம்:** நம்பியவர்கள் சிக்கலில் மாட்டிவிடக்கூடும். விழிப்புத் தேவை. பெற்றோர் திட்டமிட்ட விஷயங்கள் ஓரளவே நிறைவேறும் இடமாற்றங்கள் உறுதியாகும்.

**தனுசு:** உங்கள் சாதனைகளுக்கு குறுக்கே நின்ற விஷயங்கள் அகலும். நினைத்தவை நிறைவேற இன்னும் சற்றுப் பொறுமை தேவை.

**மகரம்:** பணியில் எதிர்வரும் சங்கடங்களை திறம்பட சமாளிப்பீர்கள். குடும்பத்தினர் பொறுப்பாக நடந்து கொள்வது மகிழ்ச்சி தரும்.

**கும்பம்:** நிகழ்ச்சியில் நீங்கள் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிள்ளைகளின் நன்மைக்கான பேச்சுவார்த்தைகள் நன்கு முடியும்.

**மீனம்:** பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும். வெளிநாட்டிலிருந்து வரும் செய்திகள் வியப்பளிக்கும். முக்கிய முடிவு எடுத்து நிறைவடைவீர்கள்.



# 2021 உங்கள் ராசிக்கு எப்படி?

## ஆங்கிலப் புத்தாண்டு பலன்கள்




இன்னும் சிறிது நாள்களில் கடக்க இருக்கும் 2020 ஆம் ஆண்டின் முடிவுக்காக எம்மில் பலரும் ஆர்வ மாகக் காத்துக் கொண்டிருக்கிறோம். இந்த வருடம் போல் எப்போதும் உலக மக்கள் துயரத்தைச் சந்தித் திருக்கமாட்டார்கள். 2020ஆம் ஆண்டைக் கடக்க இருக்கும் நிலையில், வர இருக்கும் புதிய 2021 ஆம் ஆண்டைப் பற்றிய பயமும் தொற்றிக் கொண்டுள் ளது. இந்த ஆண்டாவது உலக மக்களுக்கு சுபீட்சத் தைத் தருமா? என்கிற எதிர்பார்ப்பு ஒவ்வொரு வருக்கும் அதிகமாகவே இருக்கிறது என்று கூறலாம். அவ்வகையில் வர இருக்கும் 2021ஆம் ஆண்டுக் கான பலன்கள் இங்கு தரப்படுகின்றன.

கடந்து செல்ல இருக்கும் 2020 ஏற்படுத்திய இன் னல்களிலிருந்து மீண்டு, வர இருக்கும் 2021ஆம் ஆண்டில் 12 ராசிகளில் தனுசு ராசிக்காரர்களுக்கு என்ன மாதிரியான பலன்கள் இருக்கும்? என்கிற ஆர்வத்துடன் இருப்பார்கள். உங்களுடைய ராசிக்கு நல்ல பலன்கள் கிடைக்கப் போகின்றன. சனி பகவான் இந்த ஆண்டு 12வது இடத்தில் நின்று நான்காவது இடத்தைப் பார்வையிடுகிறார்.

ராகு ஆறாவது வீட்டிலும், கேது பதினோராவது வீட்டி லும் இருக்க, மற்ற கிரகங்கள் ஆண்டின் தொடக்கத் தில் இருந்து பெயர்ச்சி ஆகிக் கொண்டே இருப்பார் கள். இந்த கிரகங்களின் அடிப்படையில் உங்களுக்கு என்ன மாதிரியான பலன்கள் இருக்கும் என்று இப் பதிவில் பார்ப்போம்.

**குடும்பம்:** தனுசு ராசிக்காரர்களுக்கு குடும்பத்தைப் பொறுத்தவரை சிறப்பாகவே அமைய இருக்கிறது. சனி பகவான் நான்காவது வீட்டைப் பார்ப்பதால் குடும் பத்தில் ஒற்றுமைக்கு குறைவிருக்காது. சகோதர சகோதரிகளுக்கு இடையே இருந்த பிரச்சனைகள் நீங்கி ஒற்றுமை பலப்படும். ஆண்டின் தொடக்கத்தில் குரு பகவான் சனியுடன் இணைந்து இருப்பதால் மங்கல நிகழ்ச்சிகள் மற்றும் பூர்வீக சொத்துக்களை புதுப்பிக்கும் வாய்ப்புகளும் ஏற்படுவதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளன இதுவரை தடைப்பட்டுக் கொண்டிருந்த திருமண சுபகாரியங்கள் கைகூடி வருவதற்கு வாய்ப்புகள் உள்ளன. பெற் றோர்களின் ஆசீர்வாதமும், அவர்களுடைய அன் பையும் பெறுவீர்கள்.

**வியாபாரம் மற்றும் தொழில்:** தொழில் மற்றும் வியா பாரத்தில் தனுசு ராசிக்காரர்களுக்கு நல்ல முன்னேற் றம் இருக்கும். ஆண்டின் தொடக்கத்திலிருந்து இறுதி வரை படிப்படியான முன்னேற்றத்தை உங்களுடைய உழைப்பின் மூலம் நீங்கள் அடைவீர்கள். உங்களு டைய விடா முயற்சிக்கு விஸ்வரூப வெற்றி கிடைக்க இருக்கிறது. மே மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் நீங்கள் எதிர்பார்த்த மாற்றங்கள் ஏற்படுவதற்கு சாத்தியக் கூறுகள் உண்டு. புதிய தொழில் தொடங்க நினைப் பவர்களுக்கு அமோகமான வெற்றி கிடைக்கக்கூடிய யோகமும் உண்டாகும். சூரியன் பெயர்ச்சி ஆகும் பொழுது திடீரென நல்ல வாய்ப்புகள் உங்களைத் தேடி வருவதற்கும் வாய்ப்புகள் உண்டு. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் நாணயமாக நடந்து பாராட் டுக்களைப் பெறுவீர்கள்.

**உத்தியோகம்:** உத்தியோகத்தில் இருக்கும் தனுசு ராசிக்காரர்களுக்கு மே மற்றும் ஜூன் மாதங்களில் நல்ல பலன்கள் கிடைக்கப் பெறும். நீங்கள் உங்களு டைய தீவிர உழைப்பைக் கொடுத்தமைக்கு உரிய அங்கீகாரமும், பதவி உயர்வும் கிடைப்பதற்கான யோகம் உண்டாகும். உத்தியோகத்தில் சக பணியா ளர்களை அனுசரித்து செல்வதன் மூலம் அவர்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள முடியும். மேல் அதிகாரிகளுடன் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி புரிதல் உருவாகும்.

**பொருளாதாரம்:** பொருளாதாரத்தில் தனுசு ராசிக்கா ரர்களுக்கு நல்ல அதிர்ஷ்டம் உண்டாகும். ஜூலை முதல் ஒக்ரோபர் வரையான காலகட்டத்தில் உங்களு டைய வருமானம் அதிகரிக்கும். பொருளாதார ரீதி யான முன்னேற்றத்தில் ஏற்றம் காணலாம். பட்ஜெட் வாழ்க்கை போய் ஓரளவுக்கு சாதாரண நிலைக்கு கொண்டு வந்து விடுவீர்கள். பெண்களுக்கு பணம் பல வழிகளில் கிடைக்கும் வாய்ப்புகள் உண்டு. கரைந்து வந்த வங்கி சேமிப்புகள் மீண்டும் அதிகரிப் பதற்கான வாய்ப்புகள் உண்டு. பெரிய பெரிய முதலீ டுகள் மூலம் நல்ல லாபத்தைக் காண்பீர்கள்.

**பெண்களுக்கு:** தனுசு ராசியில் பிறந்த பெண்களுக்கு ஆரோக்கிய ரீதியான விஷயத்தில் கூடுதல் கவனம் தேவை. உங்களுடைய குடும்ப வாழ்க்கையில் சிறப் பான முன்னேற்றம் இருக்கும். கணவன் மனைவிக்கு இடையே இருந்து வந்த மனக் குழப்பங்கள் நீங்கி தெளிவு பிறக்கும். ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள முயற்சி செய்வீர்கள். இறை வழிபாடுகளில் கவனம் செலுத்தினால் மன அமைதி பெறலாம். திருமணம் தொடர்பான விஷயங்களில் பெண்களுக்கு மன துக்குப்பிடித்த வாழ்க்கை அமையும்.

---

## முதியோர் இல்லத்தில் 45 பேருக்கு தொற்று

கொழும்பு, டிசெ.26

கொழும்பு மோதரைப் பகுதியில் அமைந்துள்ள முதியோர் இல் லத்திலுள்ள 45 முதியோருக்கு கொவிட்-19 தொற்று உறுதி யாகியுள்ளது.

இவர்களுக்கு மேற்கொள்ளப் பட்ட பி.சி.ஆர். பரிசோதனை யில் தொற்று உறுதிசெய்யப் பட்டுள்ளது என கொழும்பு மாநகரசபையின் பிரதான வைத்திய அதிகாரி ருவன் விஜ யமுனி தெரிவித்துள்ளார். (ந-இ)

---

ஈஸ்டர் தாக்குதல் எதிரொலி

## தேவாலயங்களுக்கு விசேட பாதுகாப்பு

கொழும்பு, டிசெ.26

கிறிஸ்மஸ் பண்டிகை விசேட ஆராதனை கள் இடம்பெறுவதால், கிறிஸ்தவ தேவா லயங்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் ஊட கப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

அதன்படி வழிபாடுகள் இடம்பெறும் கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு நேற்று முன்தினம் இரவு தொடக்கம் விசேட பாது காப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. கடந்த வருடம் ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கை யின் கிறிஸ்தவ தேவாலயங்களில் நடத் தப்பட்ட பயங்கரவாத தாக்குதல்களில் 250க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள் ளதுடன், 500க்கு மேற்பட்டவர்கள் காய மடைந்திருந்தனர்.

இதையடுத்து தேவாலயங்களின் பாது காப்புத் தொர்பில் கவனம் செலுத்தப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

---

## ஜனவரி முதலாம் திகதி திரையரங்குகள் திறப்பு

கொழும்பு, டிசெ.26

நாட்டில் தனிமைப்படுத்தப்படாத பகு திகளில் உள்ள திரையரங்குகள் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் திறக்கப்படவுள்ளன என திரைப்படக் கூட்டுத்தாபனம் அறி வித்துள்ளது.

திரையரங்கின் மொத்த கொள்ளள வில் 25 சதவீத அனுமதியுடன் திரையரங்குகளைத் திறக்க அனு மதி வழங்கப்பட்டுள்ளது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (வ-இ)

---

## மதுபானங்களுடன் சந்தேகநபர் கைது

கொடிகாமம், டிசெ. 26

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட் பட்ட தவசிகுளத்தில் 121 சாராயப் போத்தல்களும் 10 பியர் ரின்களும் வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவர் நேற்று கைது செய்யப் பட்டுள்ளார். (டு.159)

---

## ஜனாஸா எரிப்புக்கு சு.கட்சியும் எதிர்ப்பு!

கொழும்பு, டிசெ.26

கொரோனா வைரஸால் உயிரிழக்கும் முஸ்லிம்களை அடக்கம் செய்வதற்கு எதிரான தீர்மானத்தைக் கொண்ட அரசை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சரு மான தயாசிறி ஜயசேகர கடுமையாக விமர்சித்துள்ளார்.

இலங்கையில் பிறந்த ஒருவர் இலங்கை யில் மரணிக்கும் போது அவரது உடலை இலங்கையில் புதைக்காமல் வேறு நாடு களுக்கு அனுப்புவது நியாயமான விடய மல்ல.

முஸ்லிம் மக்களுக்கு அவர்களுடைய மார்க்க முறைகளுக்கு அமைய சடலங் களைப் புதைப்பதற்கு அனுமதி வழங்கப் பட வேண்டும் என்றும் அவர் கூறியுள் ளார். (ற-இ)

# ஆழியின் ஊழி!

## ஓடி மறைந்தன ஈரெட்டு ஆண்டுகள்



● நீராவியூர் யசிந்தா

பதினாறு வருடங்களுக்கு முன்னர் இதே நாள் இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் ஆழிப் பேரலையால் வழித்துத் துடைக்கப்பட்டன. கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடி மறுநாள் உறங்கிக் கொண்டிருந்த பல்லாயிரம் உறவுகளின் இறுதி உறக்கமாக அது அமைந்தது. அந்தக் கோரம் நடைபெற்று 16 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் பசுமரத்தில் ஏற்றப்பட்ட ஆணியாக மனதில் பதிந்து கனத்து நிற்கின்றன அந்தத் தடங்கள்.

இந்து சமுத்திரத்தின் அருகில் உள்ள இந்தோனேசியாவின் தீவுக் கூட்டங்களில் ஒன்றான சுமாத்திரா தீவின் வடக்கே கடலுக்கு அடியில் காலை 6.58 மணிக்கு 9.0 ரிச்டர் அளவில் ஏற்பட்ட நில நடுக்கமானது சுனாமியைத் தோற்றுவித்தது. அடுத்த இரு மணி நேரத்தில் இந்தப் பேரலை இலங்கையின் பல பகுதிகளைத் தாக்கியது. 14 நாடுகளைச் சேர்ந்த இரண்டு லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிர்கள் அந்தக் கோரத்தில் மடிந்தன. இந்தோனேசியாவில் ஒரு லட்சத்து 84 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். இலங்கையில் சுமார் 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. இதன்படி சுனாமியால் அதிக அழிவுகளை எதிர்கொண்ட இரண்டாவது நாடாக இலங்கை உலக அளவில் அடையாளப்படுத்தப்படுகின்றது. அதிலும் சுமார் 9 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிர்களைக் காவு கொடுத்தது அம்பாறை. ஏனைய கரையோரங்கள் அடுத்தகட்டப் பாதிப்புக்களை எதிர்கொண்டன.

### இலங்கைக்கே புதியது

கி.பி 3ஆம் நூற்றாண்டளவில் வாழ்ந்த வச்சிர நந்தி என்ற முனிவர் 'இறையனார் களவியலுரை' என்ற நூலை எழுதினார். அதில் கி.பி முதலாம் நூற்றாண்டுக்கு முன் நமது முன்னோர்களால் பாதுகாக்கப்பட்டு வந்த சங்கங்களும் அதனோடு இணைந்த ஆவணங்களும் கடல்கோளால் காவு கொள்ளப்பட்டது எனக் குறிப்பிடுகிறார். அம்முனிவரால் கூறப்பட்ட கடல்கோள் பற்றி வரலாற்றுத்துறை மாணவர்களும் தமிழ் இலக்கிய மாணவர்களும் ஆண்டாண்டு காலமாகக் கற்றுவந்த போதிலும் இலங்கையர்களைத் தாக்கிய ஆழிப்பேலையே அன்றைய கடல்கோள் என்ற பாடத்தை 2004 சுனாமியே யதார்த்தமாகக் கற்றுக் கொடுத்தது.

### கடல்கோள் என்றால் என்ன?

பூமி பல தட்டுக்களைக்கொண்டமைந்தது. அந்தத் தட்டுக்கள் அதிர்வு விசைகளுக்கேற்ப துலங்கல்களைக் காட்டக் கூடியன. அவ்வாறான நில அதிர்வு கடலடித் தட்டுக்களைத் தாக்கும்போது ஏற்படும் உடனடி நிகழ்வே சுனாமியாகும். ஜப்பானின் தீவுப்பகுதி மக்களை இவ் அலை அடிக்கடி தாக்குவதால் அவர்கள் அதற்குப் பழக்கப்பட்டே தங்கள் குடியிருப்புக்களையும் அமைப்பர். நில அதிர்வுகள் ரிச்ட்டர் அளவில் தீர்மானிக்கப்படுவதால் அதன் அளவுகள் குறைவடையும் போது நில அதிர்வுகள் மட்டுமே ஏற்படும். அதன் அளவுகள் அதிகரிக்கும் போதே சுனாமியாக மாறி கடலலையில் தாக்கத்தை ஏற்படுத்தும். நில அதிர்வுகளின் விசை நிலைத் தாக்கங்களே சுனாமியைத் தீர்மானிக்கின்றன.

### அனுவபங்கள் அழியாதவை

சுனாமிப் பேரலை முடிந்ததும் அது பற்றி மக்களுக்குள் பேசப்படுகின்ற கதைகள் அதிர்ச்சியும் அதிசயமும் நிறைந்தவை. சுனாமி அனர்த்தம் ஏற்படுவதற்கு முதலிரு நாட்களுக்கு முன், கடல் சீறி எழும்பி வந்ததை தாம் கனவில் கண்டதாக சிலர் தமது அனுபவங்களில் மீட்டிக் கொள்கின்றனர்.

கடல் வருகிறது என்ற சத்தம் கேட்டதும் முதலாவது அலையைக் கண்டேன். பிறகு நான் எங்கே இருக்கிறேன் என்று கூறமுடிய வில்லை. மரத்தின் கிளையொன்றினைப் பற்றினேன் அது பல தடைகளைத் தாண்டி ஒரு வீட்டின் கூரையின் மீது என்னை ஏற்றியது. மரத்தின் கிளைகளால் நான் மீட்கப்பட் டேன். எனக்கு என்ன நிகழ்ந்ததென்றே தெரியாது. அரைநிர்வாணமாக நான் காப்பாற்றப்பட்டேன். மானத்துக்குப் பயந்தே பலர் வெளியில் வராமல் மரித்துப் போனார்கள் என்கின்றார் இன்னொருவர்.





### சுனாமி டிசெம்பரில் வருமா?

டிசெம்பரை அண்மித்த பகுதிகளிலும் டிசம்பரிலுமே இயற்கை அனர்த்தங்கள் பெரும்பாலும் நிகழும். மண்சரிவுகள், வெள்ளப்பெருக்குகள், சூறாவளி உள்ளிட்டவைகள் இக் காலப்பகுதியிலேயே நடைபெற்று வந்துள்ளன. அதற்குக் காரணம் ஒக்ரோபரைத் தொடரும் காலப்பகுதிகள் கால நிலை மாற்றங்களுக்கான பருவ நாட்காட்டியினைக் கொண்டதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளமையே. இந்த வருடமும் இதை அவ தானித்திருக்கலாம். ஆனால் இவற்றை வைத்துக் கொண்டு வருடந்தோறும் நடைபெறுகின்ற சில இயற்கை அனர்த்தங்களால் அப்பகுதிக்குள் சுனாமி யும் வரும் என நம்புவது மடமையானதாகும்.

### கடல்கோளுக்கு முன்னர் அதிசயங்கள் நிகழுமா?

2004இல் சுனாமி அனர்த்தம் ஏற்படுவதற்கு முன்னர் கோடிக்கணக்கான சூரை இன மீன்கள் பிடிபட்டமை, பாம்பு இன மீன்கள் அதிகம் கரை ஒதுங்கியமை, கிணறுகளில் நீர் மட்டம் அதிகரித்தமை போன்ற சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் இவைகளை வைத்துக்கொண்டு சுனாமி வருவதாக நம்புவது இயற்கைக்கு மாறான சிந்தனையாகும். இதனை வைத்து சில ஜோசியர்களும் மக்களை ஏமாற்றி மூக்குடைந்த வரலாறுகளை மக்கள் மறக்கக் கூடாது.

### சுனாமித் திருடர்கள்

சுனாமி அனர்த்தத்தை வைத்து அது ஏற்பட்ட அடுத்த மணித்தியாலம் முதலே களவுகளும் பண மோசடிகளும் ஆரம்பமாகின. சிலருக்கு தங்கச் சுனாமி என்பதுபோல் மக்களது உடமைகளையும் நிவாரணங்களை யும் திருடும் மோசடிக் கூட்டம் நன்றே பிழைத்தது. அதேபோன்று சுனாமி வரவுள்ளது என்று ஒரு பகுதியில் இருந்து மக்கள் திட்டமிட்டு வெளியேற்றப்பட்டு திருட்டுக்களும் இடம்பெற்றுள்ளன.

ஆக மொத்தத்தில் பெரும் துயரக்கறையை இந்தப் பேரலை தந்து சென்றுள்ளது. 16 ஆண்டுகள் அல்ல இன்னும் எத்தனை ஆண்டுகள் சென்றாலும் இந்த அவல நினைவுகள் நெஞ்சில் நிழலாடும்.



## போக்குவரத்து இடையூறுக்கு தற்காலிகத் தீர்வு கிட்டியது!

கிளிநொச்சி, டிசெ. 26

கிளிநொச்சி ஊற்றுப்புலம் பகுதியில் போக்குவரத்துக்கு தடையாக இருந்த பகுதிக்கு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தால் தற்காலிகத் தீர்வு வழங்கப்பட்டுள்ளது.

வள்ளுவர் பண்ணையையும், நாவலர் பண்ணையையும் இணைக்கும் குறித்த ஊற்றுப்புலம் பிரதான வீதியில் புதுமுறிப்பு குளத்தின் நீர்மட்டம் அதிகரிப்பு காரணமாக வீதியைக் குறுக்கறுத்து குளத்து நீர் தேங்கியிருந்தது. இந்த நிலையில் குறித்த விடயம் சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. இதையடுத்து குறித்த வீதியின் போக்குவரத்துக்கு தற்காலிகத் தீர்வு கொடுக்கப்பட்டுள்ளது. விரைவில் நிரந்தரத் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர். (ம-6)

கொரோனா பெருந்தொற்று

# புதிய வைரஸை கண்டறியும் வசதி விமான நிலையங்களில் கிடையாது

## சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டு

**கொழும்பு, டிசெ. 26**

**கொரோனா வைரஸ் கூடுதல் தகவமைப்புடன் பரவி வரும் நிலையில், அதைக் கண்டறியும் வசதி இலங்கை விமான நிலையங்களில் இல்லை என்று மருத்துவ அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

கொரோனா வைரஸ் கூடுதல் தகவமைப்புடன், கூடுதல் வீரியத்துடன் பரவி வரும் நிலையில் இலங்கையிலும் அது பரவலாம் என்று எச்சரிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இலங்கை விமான நிலையங்களில் இந்த புதிய வகை கொரோனா வைரஸை அடையாளம் காணும் தொழில்நுட்பம் இல்லை என்று தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய வகைக் கொரோனா தாக்கியுள்ளதா என்று இலங்கை விமான நிலையங்களில் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளால் உறுதிப்படுத்த முடியாது.

ஆனால், பி.சி.ஆர் பரிசோதனை மூலம் ஒரு நபர் கொரோனாத் தொற்றுக்கு உட்பட்டுள்ளாரா என்று அறியலாம் இலங்கை நுண்ணுயிரிகள் குறித்த கல்லூரியின் தலைவர் டொக்டர் ஷிரானி சந்திரசிறி தெரிவித்தார். (ம-இ)

## ரஷ்யாவிலிருந்து நாட்டுக்கு கொரோனாத் தடுப்பு மருந்து

### *பேச்சுக்களை ஆரம்பித்தது இலங்கை*

கொழும்பு, டிசெ.26

ரஷ்யாவின் கொரோனா வைரஸ் தொற்றுக்கான தடுப்பு மருந்தை இலங்கைக்கு கொண்டுவருவதற்கான ஆரம்பகட்ட முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன என இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் உதவியுடன் இதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. ரஷ்ய மருந்து செலவு குறைந்தது. இம் மருந்தை சேமிப்பது சுலபம். மருந்து தொடர்பில் பேராசிரியர் லமாவன்ச ரஷ்ய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார். அத்துடன் இது குறித்து ரஷ்ய தூதுவருடனும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். (ந-இ)



கிளிரெக்கின் (KILI TECH) “பயன் தரும் மரங்கள் நடுவோம், வளம் பல பெறுவோம்” எனும் தொனிப்பொருளில் மரநடுகை செயற்றிட்டத்தின் மூன்றாவது கட்டம் கிருஸ்ணபுரம் கிராம அலுவலர் அலுவலகத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்தத் திட்டத்தில் 25 குடும்பங்களுக்கு மா, பலா, ஈரப்பலா, தென்னை, தேசி, தோடை, கொய்யா, மாதுளை , பெசன்புரூட், அக்குரசை போன்ற மரக்கன்றுகள் வழங்கி நடுகை செய்யப்பட்டன. அத்துடன் கிராம அலுவலர் அலுவலக வளாகத்திலும் 10 மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன. இவற்றை சிறந்த முறையில் பராமரித்து வளர்க்கும் குடும்பங்களில் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன என தெரிவிக்கப்பட்டது. (ரி5-159)



## வறிய குடும்பங்களுக்கு உடுதுணிகள் வழங்கல்

வவுனியா, டிசெ. 26

லண்டன் என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயத்தால் வறிய குடும்பங்களுக்கு உடுதுணிகள் வழங்கப்பட்டன.

லண்டன் என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம் தமிழர் தாயகப் பகுதியில் பல்வேறு உதவித்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அதன் ஒரு பகுதியாக வடக்கு, கிழக்கில் வாழும் மக்களுக்கு இந்த உடுதுணிகள் வழங்கப்பட்டன. (ம-110)

## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ.26

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காட்டுப்புலம் பகுதியில் கசிப்புடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். வீட்டில் வைத்து நபரொருவர் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுகிறார் என கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து. குறித்த வீட்டை முற்றுகையிட்ட



வட்டுக்கோட்டை பொலிஸார் கோடா மற்றும் கசிப்பு என்பனவற்றை கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட குறித்த நபருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (ரி5-25)

## பொருளாதார நிலையங்களுக்கு விசேட வழிகாட்டல்கள் வெளியீடு

கொழும்பு, டிசெ.26

கொவிட்19 வைரஸ் தொற்றுக்கு மத்தியில் நாட்டிலுள்ள 16 பொருளாதார மத்திய நிலையங்களின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு சுகாதார அமைச்சால் விசேட வழிகாட்டல்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அவையாவன, கொரோனாத் தொற்று ஒழிப்புக்குத் தேவையான திட்டங்களை அந்தந்த பொருளாதார மத்திய நிலையங்கள் தயார்செய்துகொள்ள வேண்டும். அந்தத் திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றமை தொடர்பில் கண்காணிக்க உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க வேண்டும்.

அனைத்துப் பொருளாதார மத்திய நிலையங்களையும் தூய்மையாக பேணுதல் அவசியம். பொருளாதார மத்திய நிலையங்களுக்குச் செல்வோர் வெற்றிலை உண்பதற்கும், புகைப்பிடிப்பதற்கும் தடை விதிக்கப்பட வேண்டும். வளாகத்துக்குள் எச்சில் துப்பவும் தடை விதிக்கப்பட வேண்டும்.

சமூக இடைவெளியைப் பேணுவதை அனைத்துப் பொருளாதார மத்திய நிலையங்களும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

கழிவுகளை உரிய முறையில் அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொருளாதார மத்திய நிலையத்துக்கு வருவோருக்கு எழுமாறாக பி.சி.ஆர் பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும்.

கைகளைக் கழுவ, தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (ற-இ)

## போதைப்பொருள் வைத்திருந்த ஒருவர் கைது

கொழும்பு,டிசெ.26

15 லட்சம் பெறுமதியான போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் தலங்கம பண்டாரவத்த பகுதியில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து ஐஸ் போதைப் பொருளை பயன்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட உபகரணம் ஒன்றும், ஒரு லட்சம் ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர், இந்தியாவில் இருந்து போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுகிறார் எனக் கூறப்படுகின்ற வெள்ளே சுரங்க மற்றும் பத்தரமுல்லே சன்ஜ் ஆகியோரின் சகா என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ஐ-இ)

# வாரி வழங்கும் வாரிவனேசர்





திருவம்பலம் தென்னவன்

சிவபூமியென்று புகழப்படும் இலங்கையில் இராவணன் காலத்தில் இருந்தே பல சிவன் கோவில்கள் இருந்துள்ளன. விருபாக்கன் என்பவரால் வாரிவனத்தில் (சாவகச்சேரியில்) உருவாக்கப்பட்ட தான்தோன்றி இலிங்கக் கோயில், பின்னர் சோழர்களால் பெரிதாக்கப்பட்டு சிறப்பாக இருந்தது. பிற்பகுதியில் போத்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர்களால் அந்தக் கோயில் முற்றாக நாசமாக்கப்பட்டது. அதன்பின்னர் சாவகச்சேரியில் மத்திய போக்குவரத்து நடுவத்துக்கு அண்மித்த இடத்தில் புதிய கோவிலமைத்து சோழர் கால வாரிவனலிங்கத்தை வைத்து மக்கள் வழிபட்டு வந்தனர். மீண்டும் இறைவன் திருவருளால் வாரிவனத்தின் நடுவிலே நீதிமன்ற வளாகத்தின் முன் புதுப்பொலிவுடன் கருங்கல் கருவூலமாகவும், புதிய இலிங்கமாக வாரியப்பர் எழுந்தருளி செந்தமிழில் வழிபடப்படுகிறார். சூத முனிவர் கூறிய புராணமாகிய தக்ஷண (தென்) கைலாச புராணத்தில் பதின்னான்காவது படலத்தில் வாரிவனம் பற்றிய வரலாறு கூறப்பட்டுள்ளது.

சோழவள நாட்டில் சிறப்பான இடமாகிய திருவாஞ்சியப் பகுதியில் , சிவபத்தனாகிய வைசிய குலத்தைச் சேர்ந்த விருபாக்கன் வாழ்ந்து வந்தான். அவன் தன்னை நாடி வரும் முனிவர்கள், சிவனடியார்கள், துறவிகள் மற்றும் அந்தணர்களுக்கு நெல்,உணவு, பொன், பொருள், ஆடை போன்றவற்றை வாரி வழங்குவான். அடியார்தம் பெருமையை உலகுக்கு வெளிப்படுத்த விரும்பிய ஏங்கள் பெருமான் மறையவர் வேடம் தாங்கி விருபாக்கனிடம் வந்து தனக்கு வீடு வாசல் இல்லையென்றும், உண்ண உணவில்லையென்றும் கூறி இரந்து நின்றார். விருபாக்கன் தன் வீட்டையும், விளை நிலங்களையும் மறையவருக்கு எழுதிக் கொடுத்தார். பின்னர் இவற்றை வாங்கிய மறையவர் மறைந்ததைக் கண்ட விருபாக்கன் இது ஆண்டவன் திருவிளையாடல் என்று உணர்ந்து, மனைவி விசாலாட்சியுடன் திருமறைக்காட்டுக்கு வந்து மறைக்காட்டுநாதரை வணங்கிய பின்னர் கப்பலேறி காங்கேசன்துறை வழியாக யாழ்ப்பாணம் வந்தார்.

**சிவலிங்கம் வெளிப்படல்**

கொடிகாமத்தில் (கொடிகாமம்) வசித்து வந்த விருபாக்கன் வணிக வழி வந்தவன். அவன் தனது வாழ்வாதாரத்துக்கு பசுக்களை வளர்த்து பால் வணிகம் செய்தான். பாலை குடத்தில் நிரப்பி தலையில் கொண்டு பல இடங்களுக்குச் சென்று வணிகம் செய்வான். இப்படி இருக்கையில் ஒரு நாள் குடத்துடன் செல்லும்பொழுது, கால் தடக்கி விழுந்து குடம் உடைந்தது. இது தன் கவனவீனம் என்று நினைத்து வீடு மீண்டான். மறுநாளும் இப்படியே அதே இடத்தில் குடம் தவறிவிழ வியப்படைந்த விருபாக்கன், வந்தவழியைப் பார்க்க மாதொருபாகன் சிவலிங்க வடிவில் கொடிகளின் மத்தியில் காட்சி கொடுத்தார்.

விருபாக்கன் சிவலிங்க வடிவம் வெளிப்பட்ட காட்சியைக் கண்டதும் தன்னறிவு மயங்கிப் பின்னர் சிவபெருமானின் திருவருளுடன் நல்லறிவு விளங்கவும் எழுந்து நின்று கண்களில் ஆனந்தக்கண்ணீர் பெருக, கழகமோடு அமர்ந்து பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந்தமிழைத் தந்த கண்ணுதற் பெருங்கடவுளைப் போற்றிப்பாடி வணக்கம் சொன்னான்.

**வாரிவனேசர் மழை வெள்ளத்தில் மறைதல்**

விருபாக்கன் பெருமையை உலகுக்கு வெளிப்படுத்த விரும்பிய வாரிவனேசர், அதிகமாக மழையை வரவழைத்து ஊழிக்காலமென ஐயுறும்படியாக பெருவெள்ளத்தை ஏற்படுத்தினார். பெருவெள்ளத்தால் சிவலிங்கம் மூழ்கி சிவபூசை தடைப்பட்டதைக் கண்டு மனமுடைந்த விருபாக்கன், இறைவனான வாரியப்பரைக் கண்டு சிவ பூசையைச் செய்ய முடியாதவிடத்து தான் இறந்துவிடத் துணிந்தான்.

**வைரவ சூலம் வெள்ளத்தை வற்றச்செய்தது**

வைரவப் பெருமான் தீயின் வலிமை கொண்ட சூலப்படையை ஏவி வெள்ளத்தை வற்றச்செய்தார். வெள்ளம் வற்றி மீண்டும் வெளிப்பட்டார் வாரிவனேசர். விருபாக்கன் உடனே பாற்குடங்களைக் கொண்டு வாரிவனேசரை நீராட்டி, அவரைப் புகழ்ந்து பாடி அருளைப் பெற்றான். பின்னர் தனக்கு துணை செய்த பளையில் எழுந்தருளியிருக்கும் வைரவப் பெருமானுக்கு வடை படைத்து வணங்கினான்.

அவரின் விண்ணப்பத்தை ஏற்று வைரவப் பெருமான் நீவிர் விரும்பியவாறே ஆகட்டும் என்று எழுந்தருளுகிறார். வைரவப் பெருமானும் இக்கருங்கற்கோவிலில் நிலைப்படுத்தப்படுகிறார். விருபாக்கன் வேண்டியது போல் வாரியப்பரும், வைரவரும் ஒரே இடத்தில் எழுந்தருளுவது மிகவும் சிறப்பானதாகும். விருபாக்கன் பின்னர் சிறிது காலம் தவமிருந்து, இல்வாழ்க்கையை முடித்து சி சிவபுரம் சென்றார்.

**திருக்கோவில் மற்றும்**
**சைவப் பண்பாட்டு நடுவம் அமைப்பு**

ஆஸ்திரேலியா அறம் அறக்கட்டளை மற்றும் சைவ மாணவர் சபையின் ஊடாக இந்தக் கோவில் மற்றும் சைவப் பண்பாட்டு நடுவம் கட்டுவதற்கு திருவருள் கூடியது. இதற்கான முழுச் செலவையும் வழங்க சாவகச்சேரியைச் சேர்ந்தவர்கள் மகிழ்வுடன் முன்வந்தனர்.

கோவில் கட்டும் பணி 2020 ஆனி 18 ஆம் நாள் பதின்மும்மைப் பிறைநாள் கழுவாய் தினத்தன்று அடிக்கல் நாட்டுதலுடன் ஆரம்பமானது.

ஆதி வாரிவனேசர் திருக்கோவில் மீண்டும் அதே இடத்தில் நிறுவப்பட்டு, செந்தமிழ் ஆகம முறைப்படி தமிழிலே கடவுள் மங்கல நன்னீராட்டு, அருட்சுனைஞர் உயிரொளி சிவம் பிரதாபனார் குழுத் தலைமையில், சிலை நல்லோரையில் மார்கழித் திங்கள் பதிற்றொருமைப் பிறைநாள் அன்று இறையருளால் இனிதே நிகழ்ந்தது.

## 'சுனாமி நினைவேந்தல் கீதம்' இறுவட்டு கையளிக்கும் நிகழ்வு

வடமராட்சி,டிசெ.26

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் உயிர் நீத்த உறவுகளின் நினைவாக உருவாக்கப்பட்ட "சுனாமி நினைவேந்தல் கீதம்" என்னும் இறுவட்டு கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இசைக்கவி கலைக்குழுமத்தினரால் உருவாக்கப்பட்ட இவ் இறுவட்டு கையளிக்கும் நிகழ்வு உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில் நடைபெற்றது.

இந்த சுனாமி நினைவேந்தல் கீதம் எழிச்சிக் கவி யாழ் மருதன் அ.வினோத்தின் கவி வரிகளிலும் எஸ்.ஜி. எஸ். சகிலன் மற்றும் கோபிகா ஆகியோரின் குரல் வடிவிலும் உருவாக்கப்பட்டுள்ளது. இசைக்கவி கலை குழுமத்தினரால் உடுத்துறை சுனாமி நினைவாலய நிர்வாகத்திடம் இவ் இறுவட்டு கையளிக்கப்பட்டது.

(ஜ-70)



## பெட்டிக் கடையில் திருடர் கைவரிசை

### வாழ்வாதாரத்தை இழந்து முதியவர் தவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 26

அச்சுவேலி தொண்டமனாறு வீதியில் சிறு பெட்டிக் கடை ஒன்றை நடத்தி தனது வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்திய முதியவரின் கடை நேற்றுமுன்தினம் திருடர்களால் சூறையாடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு வழக்கம் போல் கடையைப் பூட்டிவிட்டு அவர் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

நேற்றுக் காலை கடையைத் திறக்க வந்த போது கடை உடைக்கப்பட்டு அதில் இருந்த பொருள்கள் அனைத்தும் திருட்டுப் போயுள்ளதை அவர் அவதானித்துள்ளார்.

தொலைபேசி மீள் நிரப்பு அட்டைகள், சோடா வகைகள் உட்பட 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

லொத்தர் சபையால் வழங்கப்பட்ட பெட்டியைப் பயன்படுத்தி அந்த முதியவர் சிறிய கடையை நடத்தி வந்துள்ளார். இந்நிலையிலேயே திருடர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர் என்று சுட்டிக் கட்டப்பட்டுள்ளது.

(ப-25)

## தைத்த ஆடைகளுக்கு விசேட வரி அறவீடு



கொழும்பு, டிசெ.26

இறக்குமதி செய்யப்படும் தைத்த ஆடைகளுக்கு வரி அறிவிடப்படவுள்ளது என இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி தொடக்கம் இலங்கைக்கு வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் தைத்த ஆடைகளுக்கு விசேட வரியொன்றை அறிமுகப்படுத்த நாம் எதிர்ப்பார்த்துள்ளோம்.

உள்நாட்டு தைத்த ஆடை வர்த்தகர்களை பாதுகாப்பதே இதன் நோக்கமாகும்.

குறைந்த தரத்தைக் கொண்ட தைத்த ஆடை இறக்கு மதியை முற்றாக நிறுத்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

200 ரூபாவில் இருந்து 450 ரூபா வரை அதிகரிக்கும் வகையான வரி முறையொன்றை எதிர்ப்பார்க்கின்றோம் என இரா ஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(ந-இ)

# வட்டவளையில் மேலும் 28 பேருக்கு தொற்று

கொழும்பு, டிசெ.26 வட்டவளை ஆடைத் தொழிற்சாலையில் மேலும் 28 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று அம்பகமுவ பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார் வட்டவளை ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களில் 10 பேருக்கு நேற்று முன்தினம் தொற்று உறுதி செய்யப்பட்டது. அதையடுத்து மேலும் 450 பேருக்கு அன்டிஜென் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. நேற்றுக் கிடைத்த முடிவுகளின்படி மேலும் 28 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. தொற்றுக்குள்ளானவர்களில் 21 பெண்களும் 7 ஆண்களும் அடங்குகின்றனர் அம்பகமுவ பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்தவர்களே அதிகம் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

**மோட்டார் சைக்கிள் தேவை**

பொக்ஸ் பிளாட்டிணம், CT 100 மோட்டார் சைக்கிள் ஒன்று தேவை.

**077 466 9597**

**யாழ். சௌக்கிய சேவை கூட்டுறவுச் சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்திச் சங்கம்**

**59 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம்**

நாளை (27.12.2020) ஞாயிற்றுக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையின் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் 59ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெறயிருப்பதனால் சகல அங்கத்தவர்களையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்

## மரண அறிவித்தல்

### திரு.செல்லர் செல்வநாயகம்

(ஓய்வுபெற்ற லங்காசிமெந்து நிறுவன ஊழியர்)

**தோற்றம்: 11.04.1947** **மறைவு: 25.12.2020**



உடுவில் இராமலிங்கம் வீதியைப் பிறப்பிடமாகவும் மாகியப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட செல்லர் செல்வநாயகம் 25.12.2020 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான சித்தர் - தேவமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், இரஞ்சிதேவராணியின் அன்புக் கணவரும், செல்வந்தா (போதகர் தென்னிந்திய திருச்சபை ), ஜெயந்தா (ஆசிரியை, யா/ மகாஜனக் கல்லூரி), தோமஸ் துஸ்யந்தன் (துருக்கி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவரான ஜெயரஞ்சினி மற்றும் சுகந்தினி, யசோதரன், தர்சினி ஆகியோரின் பாசமிகு மாமானாரும், காலஞ் சென்றவரான ஆகாஷ் மற்றும் வினோஜன் (யா/ பரியோவான் கல்லூரி), அபிநாஸ் (யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி), கிறிஸ்ரிகா (யா/ உடுவில் மகளிர் கல்லூரி), கபிலக்ஷன் (க/ புனித பற்றிமா கல்லூரி), கஸ்வின் (யா/உடுவில் மகளிர் கல்லூரி), யதுஷா (க/ புனித பற்றிமா கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனாரும், காலஞ்சென்றவர்களான திரேசா நேசமலர், அன்பு மலர், தேவமலர் மற்றும் பேரின்பநாயகம் (ஓய்வுபெற்ற வீதி புனரமைப்பு மேற்பார்வையாளர்), குலநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான S.V. பிரான்சிஸ் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), S. தம்பித்துரை (ஓய்வுபெற்ற அதிபர்) மற்றும் Dr. A. யோகராஜா (ஓய்வுபெற்ற வைத்திய நிபுணர், Green Memorial Hospital - Manipay), இராசகுலதேவி, அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதி ஆராதனை நாளை (27.12.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.
077 690 4236

தகவல்:
குடும்பத்தினர்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை மடியில் 20 • 11 • 1953

ஆண்டவன் அடியில் 26 • 11 • 2020

### இராசையா முத்துலிங்கம்

ஆவி பிரியும் போது அருகிலிருந்தும் பார்க்கவில்லையே
அதை எண்ணி எண்ணி என்மனம் ஆறுதில்லையே - ஐயா!
இளையவள் வந்து உங்களை கூப்பிடுகிறாள் என்பீர்களே - ஐயா!
இரகசியமாய் தான்வந்து அழைத்துச் சென்றாளோ - ஐயா!
மூத்தவள் குடும்பமும் உடன்பிறந்தவர்களும்
உற்றார், உறவினர்கள் முகம் காண முடியவில்லையே - என
எந்நாளும் எண்ணி எண்ணி எந்நாளும் ஏங்குகின்றார்களே
ஏன் ஐயா எல்லோரையும் தவிக்கவிட்டு
நீண்ட பயணம் சென்றீர்கள்.

அன்னாரின் மரணச்செய்திகேட்டு நான் தனியே இருந்து தவிக்கும் போது உடன் வந்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும் மற்றும் வைத்தியருக்கும், தொலைபேசி ஊடாக ஆறுதலும் அனுதாபமும் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையம், பதாகைகள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி அச்சிட்டு அனுதாபம் தெரிவித்த அறிவொளி சனசமூக நிலையத்தினருக்கும் இன்றுவரை எமக்கு சகலவழிகளிலும் உதவிய அன்பு உள்ளங்களுக்கும் எங்கள் குடும்பத்தினர் சார்பாக நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தற்போது நிலவும் Covid - 19 சூழ்நிலை மற்றும் நடைமுறைகள் காரணமாக அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை மற்றும் வீட்டுக்கிருத்திய நிகழ்விற்கும் தங்களை அழைக்க முடியாமைக்கு மிகவும் வருந்து கின்றோம்.

ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்
021 222 3144

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 02 • 03 • 1946

மறைவு 26 • 11 • 2020

கடந்த 26.11.2020 அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத்தின் ஒளி விளக்கு

### அமரர் பாலசிங்கம் தவமலர்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 24.12.2020 வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் வில்லூன்றி புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றதோடு. வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (26.12.2020) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறுவதோடு அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் மற்றும் வெளிநாடுகளிலும், உள்ளூரிலும் இருந்து தொலைபேசி மூலமாகவும், துண்டுப்பிரசுரங்கள், பதாதைகள், மலர்வளையங்கள் மூலமாகவும் இரங்கல் தெரிவித்த அனைவருக்கும், அன்னாரின் இறுதிநிகழ்வில் கலந்துகொண்டு பல்வேறு வழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு.

குடும்பத்தினர்
077 358 3746

## நினைவு பிரார்த்தனை

அமரர்கள் **கந்தையா காமாட்சி** தம்பதிகள்

(நெடுந்தீவு மேற்கு)

**35 ஆம் ஆண்டு**

மண்ணில் 16.12.1921



சிவப்பேறு 03.09.1985

**முருகப்பர் கந்தையா**

திதி: ஆவணி அபரபக்க சதுர்த்தி

**4 ஆம் ஆண்டு**

மண்ணில் 15.07.1931



சிவப்பேறு 10.12.2016

**காமாட்சி கந்தையா**

திதி: கார்த்திகை பூர்பபக்க துவாதசி

சுற்றம் தழுவி நற்பண்பு ஊட்டி பாசம்காட்டி ஊர்போற்ற
உத்தமர்களாக வாழ்ந்தீர் - அவ்வழி
நாமும் அறநெறியுடன் வையத்தில் வாழ வழி சமைத்தீர்
இந் நாளில் உங்களை வணங்கி நினைவு கூருகின்றோம்

இல.10, வெள்ளவாய்க்கால் வீதி,
உயரப்புலம், ஆனைக்கோட்டை.

என்றும் உங்கள்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 16 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகளில்.....

**வேலாயுதம்பிள்ளை மல்லிகாமலர்**
மருதமண்ணில் முத்தாக
08.06.1966

**வேலாயுதம்பிள்ளை இளவரசி**
மருதமண்ணில் முத்தாக
29.03.1995

ஆழிப்பேரலையில்
நெய்தலில் வித்தாக
2004.12.26



கல்லறை மேனிகளின் - ஓரம்
கரைதொட்டு அழுகுது - வானம்
ஆழியின் ஆறாத - காயம்
அவலத்தில் ஓயாத - அலையின் துயரம்

மருதங்கேணி வடக்கு,
மருதங்கேணி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.


## தார் இட்டு சீரமைப்பு

யாழ்ப்பாணம் மத்திய நிலையத்துக்குள் தார் இட்டு செப்பனிடும் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. கடந்த வாரங்களில் பெய்த மழையால் குழிகள் ஏற்பட்டு பஸ் நிலையத்துக்குள் தார் இடப்பட்டிருந்த பகுதிகள் சேதமடைந்திருந்தன. அவையே செப்பனிடப்பட்டன.

(எ-17)

# யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)
# கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பானஅறிவித்தல்

வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19 ஆம் திகதி 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான"வடக்கு-கிழக்கு மாகாண எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கானவிதிகள்"ற்கு அமைய யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 20.02.2020 ம் திகதிய அதிவிசேட வர்த்தமானி இல 2163/17 இலக்கங் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் என் மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின் படி யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் துணைவிதியின் பிரிவு 23 ற்கு அமைய சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக்கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

- அதற்கமைய இக்கூட்டங்களில் சமூகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப் பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
- முகவரி மாற்றம் காரணமாகவோ அல்லது வேறு காரணங்களினாலோ கிளை பொதுச்சபை கூட்டத்திற்கான அழைப்பு கடிதங்கள் கிடைக்காத வாக்களிக்க தகுதியான அங்கத்தவர்கள் இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக கருதி தமக்குரித்தான கிளை பொதுச்சபை கூட்டம் நடைபெறும் இடத்திற்கு குறித்த நேரத்தில் சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.
- கிளைப்பொதுச் சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கான சமூகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களின் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25பேர் இதில் எது குறைவோ அத்தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச் சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது(09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச் சபையைக் கோருவார். இவர்களுள் ஆகக் குறைந்தது இருவர்(02) 18 வயதிற்கும் 35வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் (09) ஒன்பதுபேருக்கும் மேற்படின் தவிசாளர் இரகசியவாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்ளுவார்.
- இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.

## கிளைக்குழு தெரிவு தொடர்பான விபரம்

| தொ இல | தவிசாளர் பெயர் | கிளை பெயர் | கிளை இல | காலம் | நேரம் காலை | கிளை பொதுச்சபை கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | Miss பொன்னுச்சாமி கிருஸ்ணவேணி | நாவாந்துறை தெற்கு | 1 | 29.12.2020 | 10.00மணி | சென் நீக்கிலஸ் சனசமூக நிலையம் |
| 2 | திரு. கணபதிப்பிள்ளை செந்தூரன் | நாவாந்துறை வடக்கு | 2 | 29.12.2020 | 10.00மணி | சென் மேரிஸ் சனசமூக நிலையம் |
| 3 | திரு. சிங்கராசா சியாந்தன் | முஸ்லீம் தெரு | 3C | 29.12.2020 | 10.00மணி | அறிவொளி சனசமூக நிலையம் ஆறுகால்மடம் |
| 4 | திருமதி புவிராஜ் தர்சினி | ஓட்டுமடம் | 4 | 29.12.2020 | 10.00மணி | கலைவாணி சனசமூக நிலையம் ஓட்டுமடம் |
| 5 | திரு. அரியரத்தினம் வசீகரன் | வண்ணார்பண்ணை | 5 | 29.12.2020 | 10.00மணி | வள்ளுவர் சனசமூக நிலையம் |
| 6 | திருமதி ஞானசீலன் ஜெயாமேரிகொன்சி | வெள்ளாந்தெரு | 7 | 29.12.2020 | 10.00மணி | கிளை 07. மானிப்பாய் வீதி. யாழ்ப்பாணம் |
| 7 | திருமதி செல்வரதன் இந்திரவதனா | குமரன் கொட்டடி | 8 | 29.12.2020 | 10.00மணி | யாழ் கொட்டடி நமசிவாய மகா வித்தியாலயம் |
| 8 | திரு. சற்குணசிங்கம் பிரேமிலன் | கந்தர்மடம் | 9 | 29.12.2020 | 10.00மணி | பிறில்லியன் கல்வி நிலையம். கந்தர் மடம் |
| 9 | திரு. வல்லிபுரம் நிதர்சன் | யாழ்பாடி | 10 | 29.12.2020 | 10.00மணி | விநாயகர் மண்டபம் (ரசீக ரஞ்சித சபா மண்டபம்). பெருமாள் கோவிலடி. மணிக்கூட்டுவீதி. யாழ்ப்பாணம் |
| 10 | திரு. சற்குணநேசன் முகுந்தவேள் | நல்லூர் வடக்கு | 11 | 29.12.2020 | 10.00மணி | வன்னியசிங்கம் பொதுப்பணி மன்றம் செங்குந்தா சந்தை வீதி நல்லூர் |
| 11 | திரு. திருச்செல்வம் வித்தககலாநிதி | நல்லூர் மத்தி | 12 | 29.12.2020 | 10.00மணி | கிளை 12.நல்லூர் கோவில் முன் வீதி |
| 12 | திரு. சந்திரசேகரம் விஜயானந்தா | கைலாசபிள்ளையார் | 13 | 29.12.2020 | 10.00மணி | TCT மண்டபம் (சொர்ணாம்பிகை மண்டபம்) நாவலர் வீதி |
| 13 | திரு. கனகரத்தினம் வக்சன் | ஆனைப்பந்தி | 14 | 29.12.2020 | 10.00மணி | நாவலர் கல்வி நிலையம் பருத்தித்துறை வீதி |
| 14 | திரு. சுந்தரலிங்கம் அகிலன் | ஆரியகுளம் | 15 | 29.12.2020 | 10.00மணி | ஆரியகுளம் முற்போக்கு வாலிபர் கழகம்.ஸ்ரான்லி வீதி |
| 15 | திரு. இரத்தினசிங்கம் கஜேந்திரன் | நீராவியடி | 16 | 29.12.2020 | 10.00மணி | சைவ பரிபாலனசபை - நீராவியடி |
| 16 | திரு. பரமசிவம் தவப்பிரியன் | புங்கன்குளம் | 17 | 29.12.2020 | 10.00மணி | அரியாலை சன சமூக நிலையம் |
| 17 | திரு. பத்மநாதன் சஞ்ஜீவன் | அரியாலை மேற்கு | 18 | 29.12.2020 | 10.00மணி | சிறீ கலைமகள் சனசமூக நிலையம் அரியாலை |
| 18 | திரு. இராசரத்தினம் வேல்குமார் | அரியாலை மத்தி | 19 | 29.12.2020 | 10.00மணி | றூபா கல்வி நிலையம் - கனகரட்ணம் வீதி அரியாலை |
| 19 | திரு. கந்தசாமி சசிகரன் | அரியாலை | 20 | 29.12.2020 | 10.00மணி | அரியாலை சரஸ்வதி சன சமூக நிலையம் |
| 20 | திரு. கணேசராசா பரநிருபன் | கொழும்புத்துறை கிழக்கு | 21 | 29.12.2020 | 10.00மணி | கொழும்புத்துறை சனசமூக நிலையம் |
| 21 | திரு. குணரத்தினம் நிசாந்தன் | கொழும்புத்துறை மத்தி | 22 | 29.12.2020 | 10.00மணி | கிளை 22. கொழும்புத்துறை மத்தி |
| 22 | திரு. ஐயாத்துரை மயூரன் | பாஷையூர் | 23 | 29.12.2020 | 10.00மணி | பாசையூர் புனித அந்தோனியார் மக்கள் முன்னேற்ற சனசமூக நிலையம் |
| 23 | திரு. சிவலிங்கம் பிரதீபன் | கொய்யாத்தோட்டம் | 24 | 29.12.2020 | 10.00மணி | கிளை 24. கொய்யாத்தோட்டம் |
| 24 | திரு. யோசப் ஜெகதாஸ் | ஈச்சமோட்டை | 25 | 29.12.2020 | 10.00மணி | கிளை 25. ஈச்சமோட்டை |
| 25 | திரு.பாலசுப்பிரமணியம் பாலவரதன் | மூத்தவிநாயகர் | 26 | 29.12.2020 | 10.00மணி | மூத்த விநாயகர் சனசமூக நிலையம். மூத்த விநாயகர் வீதி நல்லூர் |
| 26 | திரு. சோமசுந்தரம் தங்கேஸ்வரன் | சுண்டிக்குளி | 27 | 29.12.2020 | 10.00மணி | கிளை 27. சுண்டுக்குளி |
| 27 | திரு. மயில்வாகனம் கபிலன் | ஸ்ரேசன் சந்தி | 28 | 29.12.2020 | 10.00மணி | யாழ் புனித மரியாள் மகாவித்தியாலயம்.3ம் குறுக்கு தெரு |
| 28 | திரு இராசையா உதயகுமார் | மவுன்கார்மல் | 31 | 29.12.2020 | 10.00மணி | குருநகர் கலாசார மண்டபம் |
| 29 | திரு.நாகலிங்கம்.குமணதாசன் | குருநகர் | 32 | 29.12.2020 | 10.00மணி | குருநகர் சனசமூகநிலையம் |
| 30 | திரு.தாமோதரம்பிள்ளை தவமன்னன் | சென் அன்ரனிஸ் | 33 | 29.12.2020 | 10.00மணி | யாழ் புனித சம்பத்தரிசியார் கல்லூரி - புனித பத்திரிசியார் வீதி |
| 31 | திரு. பற்றிக் துரைராஜா றோய்டனிஸ்ரன் | சின்னக்கடை | 35 | 29.12.2020 | 10.00மணி | புனித யாகப்பர் ஆலயம் - குருநகர் |

**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்**
**காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.**

**ஒப்பம்: திருமதி சியாமளா சண்முகலிங்கம்**
**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**
**24.12..2020**

## தமிழ்....

தமிழ் ஊடகங்களை அடக்குவதிலும் ஒடுக்குவதிலும் ராஜபக்ச குடும்ப அரசு கங்கணம் கட்டிச் செயற்படுகின்றது என்பதற்கு 'உதயன்' மீதான வழக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் வெளியிட்டுள்ள கண்டனத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வரலாற்றில் தடம் பதித்தவர்களின் பிறந்த தினத்தையும், நினைவேந்தல் தினத்தையும் நினைவூட்டுவதும், அது தொடர்பான பதிவுகளை இடுவதும் பிரசுரிப்பதும் ஊடகங்களின் பணி. இந்த நிலையில், கடந்த நவம்பர் 26ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்த தினமன்று அது தொடர்பான செய்தியுடன் அவரின் புகைப்படத்தையும் வெளியிட்டதாக 'உதயன்' மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தெற்கில் சிங்கள மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகள் மற்றும் கட்டுரைகளில் பிரபாகரனின் படமும் வெளிவருகின்றது. இந்த நிலையில், தமிழ் பேசும் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் 'உதயன்' பத்திரிகையைக் குறிவைத்தே இந்தச் சட்டம் பாய்ந்துள்ளது.

'உதயன்' பல்லாண்டு கால வரலாற்றைக் கொண்ட பத்திரிகை. பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் கொழும்பு வாழ் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும், முஸ்லிம் மக்களின் உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்து வரும் பத்திரிகை. எனவே, இந்தப் பத்திரிகை மீதான அரசின் அராஜகத்தை வன்மையாகக் கண்டிக்கின்றேன் என்றுள்ளது. (ஒ-22)

**வேலை ஆட்கள் தேவை**

மிக்சர் கடை ஒன்றிற்கு வேலை செய்வதற்கு பெண் ஒருவர் (அடுப்பு வேலை தெரிந்தவர்) அனுபவமுள்ளவர் தேவை. Packing செய்வதற்கு பெண் ஆட்கள் தேவை.

T.P:076 1506664, 077 484 8791

**வேலையாள் தேவை**

யாழ் நகரில் உள்ள பிரபல்யமான பலசரக்கு வாணிப நிலையத்துக்கு வேலையாள் தேவை.

தொடர்புக்கு:077 116 5752

**இரசாயனவியல் (Chemistry)**

விஞ்ஞான பட்டதாரி ஆசிரியரினால் சேதன இரசாயனம் (Organic Chemistry) கடந்தகால வினாக்களுடன் தனி மற்றும் குழு வகுப்புகளாக கற்பிக்கப்படும்.

தொடர்புளுக்கு: 076 021 8959

**VACANCY**

**உடனடி வேலைவாய்ப்பு**

- HARDWARE TECHNICIAN
- WEB DEVELOPER
- SOFTWARE DEVELOPER
- MEDIA WORK
- MARKETING
- DATA ENTRY

இன்று முதல் நேர்முகத் தேர்வு இடம்பெறும்

51, Amman Road, Nallur, Jaffna.
Email:dewmasjaffna@gmail.com
Tel: 021 315 2500, 0750 22 67 33
Call Viber, WhatsApp :- 0741 38 33 68

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

### ஆசாரி சுப்பிரமணியம் (சின்னத்துரை) யோகலிங்கம்

(யாழ் பல்கலைக்கழக பராமரிப்புப் பகுதி ஓய்வுபெற்ற தொழிலாளி)

மண்ணுலகில் : 22.10.1952 விண்ணுலகில் : 25.12.2020



சரவணையைப் பிறப்பிடமாகவும் தற்போது தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் யோகலிங்கம் அவர்கள் நேற்று (25.12.2020) வெள்ளிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இரத்தினம்-கனகாம்பிகைதேவி ஆகியோரின் மருமகனும், ஜெகதீஸ்வரியின் பாசமிகு கணவரும், சுதர்மினி, கஜரூபன், துஷாந்தன், நிவேதிகா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காளிதாசின் அன்பு மாமனாரும், மஜிசனின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற குணலெட்சுமி மற்றும் கனகேஸ்வரி (தாவடி), புஸ்பராசா (பிரான்ஸ்), பேரின்பராணி (கொழும்பு), நகுலேஸ்வரன் (பிரான்ஸ்), தவராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் பாலசிங்கம், துளசிதாசன், சந்திரவதனா, பாமா வினோதினி, புவனேஸ்வரி (மலர்), லோகேஸ்வரி (ரதி), நகுலேஸ்வரி (வவா), நகுலேஸ்வரன் (அப்பன்), குணேஸ்வரி (சாந்தி) மற்றும் அமரர் ஜெகதீஸ்வரன் (தம்பி) ஆகியோரின் மைத்துனரும், யோகேஸ்வரன், இராஜேஸ்வரி, காலஞ்சென்ற பரமேஸ்வரி, குகணேஸ்வரன் மற்றும் அனிதா (லண்டன்), துவாரகன் (பிரான்ஸ்), ராகவி (கொழும்பு) ஆகியோரின் தாய்மாமனும், யஸ்வினி, யாதவன், யதுர்ஷன், நிரோஜன், கிருத்திகா, நிதுர்சன், அஸ்வின், சச்சின், ஸ்பூர்த்தி ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.12.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணிக்கு தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
077 339 3386 - கஜரூபன் (மகன்)
077 370 8236 பாலசிங்கம் (மைத்துனர்)

தகவல் :
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### செல்வத்துரை கணேசரட்ணம்

(இளைப்பாறிய பிரதம லிகிதர் நல்லூர் பிரதேச செயலகம்)

வல்வெட்டியை பிறப்பிடமாகவும், கோவில் வீதி, நல்லூர், கொக்குவில் கிழக்கு நந்தாவில் அம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வத்துரை கணேசரட்ணம் அவர்கள் நேற்று (25.12.2020) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வத்துரை மங்கயற்கரசியின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்துரை அன்னலட்சுமியின் அன்பு மருமகனும், விமலாதேவி (இளைப்பாறிய ஆசிரியை, யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான விஜயரட்ணம், ஜெகசோதி, பரம்சோதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், தர்ஷிகாவின் (ஆசிரியை, யாழ் இந்து மகளிர் கல்லூரி) அன்புத் தந்தையும், அ.சியாமளரூபன் (ஆசிரியர், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி) அவர்களின் அன்பு மாமனாரும், பிரஜீஷ், சுபீட்ஷன் (மாணவர்கள் புனித ஜோன் பொஸ்கோ) ஆகியோரின் அன்புப் பேரனும், ஜெயராணி, ஜெயபாலசிங்கம், பேபி சரோஜா, கமலாம்பிகை, ஜெயக்குமார், ஸ்ரீநேசா, லோகேஸ்வரி, ஜெயராஜ், ஜெயமாலா, காலஞ்சென்ற சாரதாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பூபாலசிங்கம், பாலாம்பிகை, காலஞ்சென்றவர்களான நித்தியானந்தம், சிவலிங்கம் மற்றும் விஜயகுமாரி, சுகந்தி, கிரிதர கோபாலன், ரேவதி, பஞ்சலிங்கம், மகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகலனும், தாவடி பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த அருள்நந்தி இராசேஸ்வரி தம்பதிகளின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.12.2020 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பத்து மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நந்தாவில் அம்மன் கோவிலடி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்,
அ.சியாமளரூபன் (மருமகன்)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10.05.1949



மறைவு 26.12.2019

### திருமதி யோகமாணிக்கம் குரூஸ் சேனாதிராஜா

எம்மை வாழ வைத்த குல தெய்வமே
பாசமிகு தாயே எமதருமை அம்மாவே!
அன்புச் சகோதரியே
நீங்கள் எம்மை பிரிந்து ஓராண்டு கடந்தாலும்
உங்களை எம்மால் மறக்க முடியவில்லை அம்மா!
இன்னும் கதறி அழுகின்றோம்
உங்கள் நினைவுகளை சுமந்தே
பிள்ளைகள் நாம் இங்கே......
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கும்

குறிப்பு: நாட்டின் அசாதாரண சூழ் நிலையால் ஒன்று கூடலை தவிர்க்கும் முகமாக எமது உறவுகள், நண்பர்கள், அயலவர்களை அம்மாவின் நிகழ்வுக்கு வீட்டிற்கு அழைக்க முடியாமைக்கு மனம் வருந்துகின்றோம். பின்னர் ஓர் திகதியில் தாங்கள் அனைவரும் அழைக்கப்பட்டு இந்நிகழ்வு நடைபெறும்

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் சகோதரர், சகோதரிகள், மைத்துனன், பெறாமக்கள், உறவினர்கள்

## ஆண்டுகள் 16இலும் அழியாச் செல்வங்களாய்!

### பேரலையில் பெருங்காவியமான பெருமகன்கள்




ஆண்டுகள் 16 ஆகினும் அழியா நினைவுகளால் எம் மனதில்......

என்றும் உம் நினைவுகளுடன்

குடும்பத்தினர்

## அனைவருக்கும்...

வார்கள் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

2021 ஆம் ஆண்டு முதலாம் தவணையின்போது, மாணவர்கள் அனைவரும் வகுப்பேற்றப்பட்ட புதிய வகுப்பில் கல்வி கற்க வேண்டும். இதற்கமைய பாடப்புத்தகங்களை இந்த ஆண்டு முடிவடைவதற்குள், அனைத்து மாணவர்களுக்கும் பெற்றுக்கொடுக்க வேண்டும் என கல்வி அமைச்சின் அறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அனைத்து மாகாணங்களின் பிரதான செயலாளர்கள், மாகாண கல்வி செயலாளர்கள், மாகாண கல்விப் பணிப்பாளர்கள் வலயக்கல்வி பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்கள் ஆகியோருக்கு கல்வி அமைச்சால் மேற்கண்டவாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ந-இ)

## பட்டப்பகலில்...

சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்த வரை, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சரமாரியாக கத்தியால் குத்திவிட்டு தப்பியோடியுள்ளனர். அவர் காயமடைந்த நிலையில் உதவி கோரியுள்ளார். அந்தப் பகுதியில் மக்கள் நடமாட்டம் குறைவாக இருந்ததால், கத்திக்குத்துக்கு இலக்காகி நீண்ட நேரத்தின் பின்னரே அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். எனினும் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர் கூலி வேலை செய்பவர் என்று கூறப்படுகின்றது. கத்திக்குத்துக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஓ,9,21,131,159)

## நேற்றும்....

திணைக்களம் அறிவித்துள்ளது.

கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 36 ஆயிரத்து 99 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 39 ஆயிரத்து 782 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 31 ஆயிரத்து 339 பேர் குணமடைந்துள்ளனர். 8 ஆயிரத்து 257 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ-22)

## மருதனார்மடம்...

42 வயதுடைய ஒருவரே கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியுள்ளார். மருதனார்மடம் சந்தை கொரோனாக் கொத்தணி கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், சந்தை வியாபாரிகள் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

அவர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டு 14 நாள்கள் ஆகியிருந்த நிலையில், அவர்களுக்கு இரண்டாவது தடவையாக உயிரியல் மாதிரிகள் எடுக்கப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் நேற்று 124 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 70 பேர் உடுவில் சுகாதார அதிகாரி பிரிவையும், 54 பேர் தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவையும் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

அதில் சந்தை வியாபாரி ஒருவருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. இவருடன் சேர்த்து கடந்த 15 நாள்களில் மருதனார்மடம் சந்தை கொரோனாக் கொத்தணியால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 105 ஆக உயர்ந்துள்ளது. (எ)

## விடுதியில்...

ரண விடுதியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டிருந்த நிலையில், அவருடன் தொடர்புடையவர்களை இனங்காணும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

60 வயதுடைய பெண் ஒருவர் இரு தினங்களுக்கு முன்னர் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார். இவர் சாதாரண விடுதியில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், பின்னர் அவருக்கு அதி தீவிர சிகிச்சைப் பிரிவிலும் சிகிச்சை அளிக்கப்பட்டிருந்தது.

அதேநேரம், அவரது உயிரியல் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்காக அனுராதபுரத்துக்கு அனுப்பப்பட்டிருந்தன. அந்தப் பெண்ணுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று அனுராதபுரத்தில் இருந்து வவுனியா மருத்துவமனைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதையடுத்து அந்த விடுதியில் சிகிச்சை பெற்று வந்த ஏனைய நோயாளர்கள் மற்றும் அங்கு பணியாற்றிய பணியாளர்களின் விவரங்கள் திரட்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-110)

## கோரிக்கையோடு...

முன்மொழிவுகளைப் பெற்று அனுப்பி வையுங்கள்.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன், பிரதேச செயலர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர்களுடன் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இவ்வாறு கூறியுள்ளார் எனத் தகவல்கள் கசிந்துள்ளன.

"தங்களது குறைகள், தேவைகளை மக்கள் பிரதேச செயலகங்களுக்கு வந்து கூறுவார்கள். அவ்வாறு வருபவர்களை மக்கள் பிரதிநிதிகளிடம் அனுப்புங்கள். மக்கள் பிரதிநிகளுக்கு மக்களுக்குச் சேவை செய்யவே பணம் ஒதுக்கப்படுகின்றது. மக்கள் பிரதிநிதிகள் தரும் திட்ட முன்மொழிவுகளைப் பெற்று அனுப்புங்கள் "என்று மாவட்டச் செயலர் கூறியுள்ளார்.

இந்த விடயத்தை ஊடகங்களுக்கு தெரிவிக்க வேண்டாம் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார் என்று கூறப்படுகின்றது. (ஓ-5)

## கடைக்குள்....

இந்தக் கடையில் நான்காவது கொள்ளைச் சம்பவம் இதுவென்று சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் மானிப்பாய் வீதி கைதடிச் சந்தியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு 8 மணியளவில் நடைபெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் மூவர் வந்துள்ளனர். அவர்கள் தங்களது முகங்களை மூடிக் கட்டியிருந்தனர். வாள் மற்றும் கோடரி என்பவற்றுடன் கடைக்குள் நுழைந்தனர். அங்கிருந்தவர்களை அச்சுறுத்தினர். கடையின் 'லாச்சியை' திறந்து அதிலிருந்த 20 ஆயிரம் ரூபா பணத்தை கொள்ளையிட்டனர். அங்கிருந்து தப்பிச் சென்றனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை தொடங்கியுள்ளனர். (ஓ-159)

## கல்மடு....

2 மணியளவில் நடந்துள்ளது. கல்மடு நகர், சம்புக்குளத்தைச் சேர்ந்த இ.லோகிதன் (வயது27) என்பவரே காணாமல் போயுள்ளார்.

லோகிதனும், அவரது நண்பர்கள் இருவரும் குளத்துக்குக் குளிக்கச் சென்ற போது இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

இவரைத் தேடும் நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெற்றன. நேற்று இரவுவரை அவரை மீட்கும் முயற்சிகள் பயனளிக்கவில்லை. இதனால் அவர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகின்றது. (எ-113,214)

## வடக்கு....

கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கையில் தடைசெய்யப்பட்ட அமைப்பானதமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த நாளன்று அவரது ஒளிப்படத்தையும் சொற்களையும் வெளியிட்டமை தொடர்பில் 'உதயன்' பத்திரிகை மீது யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் யாழ். பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இது தொடர்பில் வன்மையான கண்டனத்தை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

சுமார் 35 ஆண்டுகளாக வடக்கு மக்களுக்காக 'உதயன்' பத்திரிகை சேவையாற்றி வருகின்றது. உயிரிழப்புக்களையும் சொத்திழப்புக்களையும் தாங்கிக் கொண்டு மக்களுக்கான மகத்தான சேவையில் 'உதயன்' உழைத்து வருகின்றது. இந்தநிலையில், இந்தப் பத்திரிகை மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை அரசின் திட்டமிட்ட சதி நடவடிக்கையே. இது பத்திரிகை சுதந்திரத்தை மீறிய ஓர் செயல். இது தவறான நடவடிக்கை. இது மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

வடக்கு மக்களின் குரல் வளையாகத் தொடர்ந்து ஒலித்து வரும் 'உதயன்' பத்திரிகையை அடக்க முயற்சிக்க வேண்டாம் என்று அரசிடம் விநயமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

'உதயன்' மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கை உடன் மீளப் பெறுமாறு அரசிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன் என்றுள்ளது. (ஓ-22)

## ஜனாஸா...

வீரப்புப் போராட்டம் முன்னெடுக்க ப்பட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் கே.சுகாஸ், யாழ்ப்பாணம் பள்ளிவாசல் நிர்வாகிகள், உலமாக்கள், அரசியல் பிரதிநிதிகள், யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்கள் எனப் பலரும் அந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர். (ஓ,20,25)

## 50 பேருடன்...

நடைமுறைகளைப் பின்பற்றி நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

2004ஆம் ஆண்டு பாதிப்பை ஏற்படுத்திய சுனாமி பேரிடரால் காவு கொள்ளப்பட்டோரின் 16ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று இடம்பெறவுள்ளது. நினைவேந்தல்களை பொது இடங்களில் மேற்கொள்ள அனுமதியில்லை என்று கொரோனா தடுப்புச் செயலணியின் தலைவரும், இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா தெரிவித்திருந்தார்.

எனினும், மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், ஆகக் கூடியது 50 பேருடன் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி, சுகாதார மருத்துவ அதிகாரியின் அனுமதியுடன் நினைவேந்தல்களை நடத்த முடியும் என்றும் குறிப்பிட்டார் (ஓ.5,20)

## ஜனநாயகத்தை....

கொழும்பு, டிசெ.26

ஒரு நாட்டில் ஜனநாயகம் இருக்க வேண்டுமெனில் பத்திரிகை சுதந்திரமும் கருத்துச் சுதந்திரமும் கட்டாயம் இருக்க வேண்டும். ஆனால், அதை அடக்குவதில் ராஜபக்ச ஆட்சிபீடம் குறியாகவுள்ளது. 'உதயன்' பத்திரிகை மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை இதற்கு ஓர் உதாரணமாகும்.

இவ்வாறு ரவூப் ஹக்கீம் தலைமையிலான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வெளியிட்டுள்ள கண்டனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

தமிழ், முஸ்லிம் மக்களையும், அவர்களுக்காகக் குரல் கொடுக்கும் ஊடகங்களையும் இந்த அரசு அடக்க முயல்கின்றது. ஆனால், அரசின் இந்த எண்ணம் ஒருபோதும் வெற்றியளிக்காது.

அதிகாரத்தைத் தக்கவைப்பதற்காக எதையெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்யலாம் என்ற நினைப்புடன் இந்த அரசு ஆட்சி நடத்துகின்றது.

தமிழ், முஸ்லிம் மக்களின் அடிப்படை உரிமைகளைத் தட்டிப் பறிக்கும் அரசு, ஊடகங்களின் கருத்துச் சுதந்திரத்துக்கும் உலை வைக்க முயல்கின்றது.

'உதயன்' பத்திரிகை மீது தொடுக்கப்பட்ட வழக்கை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்த வழக்கைப் பொலிஸார் உடனடியாக மீளப்பெற வேண்டும் - என்றுள்ளது. (ஓ-22)

## பெரும்....

கொழும்பு, டிசெ.26

சர்வாதிகார ஆட்சி நடத்தும் இந்த அரசு, ஊடகங்களையும் அடக்கி ஒடுக்க முயன்றால் மிகப் பெரிய பின்விளைவுகளை சந்தித்தே தீரும்.

இவ்வாறு ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வெளியிட்டுள்ள கண்டனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ், முஸ்லிம் மக்களையும் தமிழ் ஊடகங்களையும் எதிரிகளாகப் பார்க்கின்றது இந்த அரசு. அதன் ஒரு கட்டமாகவே 'உதயன்' மீது இந்த அரசு வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

இது அரசின் திட்டமிட்ட அடக்குமுறை. அராஜகத்தின் உச்சக்கட்ட வெளிப்பாடு. பத்திரிகை சுதந்திரத்தை இல்லாதொழிக்கும் நடவடிக்கை. நாம் வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

இந்த ஆட்சியில் ஊடகங்களுக்கு எதிரான அடக்குமுறைகள் இல்லாதொழிய வேண்டும். ஆளுந்தரப்பில் உள்ளவர்களும் அரசின் இந்தக் கேவலமான நடவடிக்கைகளை எதற்கும் அஞ்சாது பகிரங்கமாகக் கண்டிக்க வேண்டும், என்றுள்ளது. (ஓ-22)




# தெளிவானவர் ரஹானே!

## இஷாந்த் சர்மா தெரிவிப்பு

புதுடில்லி, டிசெ.26

அணியிடம் இருந்து என்ன பெற விரும்புகிறார் என்பதில் ரஹானே தெளிவாக இருப்பார் என இஷாந்த் சர்மா தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் இஷாந்த் சர்மா காயம் காரணமாக ஆஸ்திரேலியா தொடரிலிருந்து விலகியுள்ளார். கோலி முதல் டெஸ்ட் முடிந்த பின்னர், மனைவி அனுஷ்கா சர்மாவுக்கு குழந்தை பிறக்க இருப்பதால் இந்தியா திரும்பியுள்ளார். இதனால் கடைசி மூன்று டெஸ்ட் ஆட்டங்களுக்கும் ரஹானே அணித் தலைவர் பொறுப்பை ஏற்றுள்ளார்.

ரஹானேவின் அணித் தலைவர் பதவி குறித்து இஷாந்த் சர்மா தெரிவித்ததாவது

இவர் பந்து வீச்சாளர்களின் தலைவர் என்பதை நான் கூறுவேன். கோலி களத்தில் இல்லாமல் ரஹானே உடன் இணைந்து விளையாடும் போதெல்லாம், அவர் என்னிடம் எந்த மாதிரியான களத் தடுப்பை விரும்புகிறீர்கள்? எப்படி பந்து வீச விரும்புகிறீர்கள்? நீங்கள் பந்து வீச விரும்புகிறீர்களா? எனக் கேட்பார்.

அவர் மற்றவர்களைப் போன்று இதை செய்யுங்கள் எனச் சொல்லமாட்டார். அவருடைய அணியிடம் இருந்து அவர் என்ன பெற விரும்புகிறார் என்பதில் தெளிவாக இருப்பார்-என்றார். (ற-இ)



# பீலேவின் சாதனையை முறியடித்த மெஸ்சி

மாட்ரிட், டிசெ.26

பிரேசில் கால்பந்து வீரர் பீலேவின் 46 ஆண்டு கால சாதனையை பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரரும், ஆர்ஜென்ரீனா நாட்டைச் சேர்ந்தவருமான லயோனல் மெஸ்சி முறியடித்துள்ளார்.

ஸ்பெயினில் பிரபலமான லாலிகா கால்பந்துத் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. அதில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த ஒரு லீக் ஆட்டத்தில் முன்னாள் சம்பியனான பார்சிலோனா அணி 3:0 என்ற கோல் கணக்கில் ரியல் வல்லாடோலிட்டை வீழ்த்தி 7 ஆவது வெற்றியைச் சுவைத்தது.

65ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரரும், ஆர்ஜென்ரீனா நாட்டைச் சேர்ந்தவருமான லயோனல் மெஸ்சி ஒரு கோல் அடித்தார். பார்சிலோனா கழகத்துக்காக மெஸ்சி அடித்த 644 ஆவது (749 ஆட்டம்) கோல் இதுவாகும். இதன் மூலம் ஒரே கழகத்துக்காக அதிக கோல்கள் அடித்தவரான பிரேசில் வீரர் பீலேவின் சாதனையை மெஸ்சி முறியடித்தார்.

பீலே, பிரேசிலைச் சேர்ந்த சான்டோஸ் கழகத்துக்காக மட்டும் 643 கோல்கள் அடித்திருந்தார். அவரது 46 ஆண்டு கால சாதனைக்கு மெஸ்சி இப்போது முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

இது தொடர்பில் மெஸ்சி தெரிவித்ததாவது

நான் கால்பந்து விளையாடத் தொடங்கிய போது எந்தவொரு சாதனையையும் தகர்ப்பேன் என்று எதிர்பார்க்கவே இல்லை. அதுவும் பீலேவின் சாதனையை கடப்பேன் என்று நினைத்துக்கூட பார்த்ததில்லை. இத்தனை ஆண்டுகள் எனக்கு பக்கபலமாக இருந்த அணியின் சக வீரர்கள், குடும்பத்தினர், நண்பர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் இந்த சமயத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்-என்றார். (ற-இ)

# கார்ப் பந்தய தொடரில் இந்திய அணி

புதுடில்லி, டிசெ.26

2021 ஆம் ஆண்டுக்கான ஆசியன் லி மான்ஸ் தொடர் கார்ப் பந்தயத் தொடரில் நரேன் கார்த்திகேயன் தலைமையிலான இந்திய அணி பங்கேற்கவுள்ளது.

இந்தக் கார்ப் பந்தயத் தொடர் எதிர்வரும் பெப்ரவரி 5,6 மற்றும் 19, 20 ஆகிய திகதிகளில் அபுதாபியில் நடைபெறவுள்ளது.

மொத்தம் 4 பந்தயங்கள் நடைபெறும். ஒவ்வொரு பந்தயமும் 4 மணி நேரம் நீடிக்கும். இதில் பார்முலா 1 கார்ப் பந்தய போட்டியில் பங்கேற்கும் முதல் இந்தியரான நரேன் கார்த்திகேயன் தலைமையில் இந்திய அணி பங்கேற்கவுள்ளது. (ற-இ)

**வேலையாள்கள் தேவை**

**மீசாலைப் பகுதியில் இயங்கும் மிக்சர் கம்பெனிக்கு** அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை மிக நல்ல முறையில் **பகோடா, மிக்சர்** செய்யக்கூடிய அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்

அத்துடன் **வட்டா ரக வாகனம்** வாடகைக்குத் தேவை.

தொடர்பு: **076 155 5536**

**மாபிள்ஸ்**

ரெறாசோ (Terrazzo) மாபிள் பதித்தல்

கிறனைற் (Granite) சமையலறைத் தட்டு, நில வேலைகள் நவீன முறையில் செய்து தரப்படும்

Since-1952

**தொல்புரம்.** தொடர்பு: 021 225 0186, 077 355 3372, 077 630 6733

**Flexo அச்சக இயந்திரம் இயக்குநர் வேலைவாய்ப்பு**

தேவையான தகைமை:

ஆகக்குறைந்தது 5 வருட அனுபவம். ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

Flexo Printing இயந்திர இயக்குநருக்கான வேலைவாய்ப்பு

தொடர்பு: Three star Packaging Solutions
No.50c, Kelaniganga Mill Road,
Mattakuliya, Colombo - 15
011 523 0052 (8.30am to 5.30 pm)

# கொரோனா காவு 186 ஆக உயர்வு!

கொழும்பு, டிசெ.26

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன நேற்றிரவு அறிவித்துள்ளார்.



களுத்துறையைச் சேர்ந்த 71 வயதான ஆண் ஒருவரே உயிரிழந்துள்ளார். புற்றுநோய், இரத்த அழுத்தம் மற்றும் கொரோனாத் தொற்றே உயிரிழப்புக்கான காரணம் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 186 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 173 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-22)

**மரண அறிவித்தல்**

**Dr.குமாரசாமி பாலச்சந்திரன்**

(நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலை - வைத்தியர்)



நயினாதீவை பிறப்பிடமாகக் கொண்ட குமாரசாமி பாலச்சந்திரன் நேற்று (25.12.2020) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2020) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு இன்பம் மலர்ச்சாலையில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**நெடுந்தீவு வைத்தியசாலை**
**உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள்.**
**021 221 5220**